
# ஆனந்த ஓவியம் — 1

[அதிர்ஷ்ட கவசம் முதலிய கட்டுரைகள்]

'கல்கி'



பாலரவி & கோ.

# ஆனந்த ஒவியம் – I

(அதிர்ஷ்ட கவசம் முதலிய கட்டுரைகள்)

அமரர் 'கல்கி'

பாலரவி அண்ட் கோ.
நூல் வெளியீட்டாளர்கள்
'திருமலை'
65/1, ஆற்காடு ரோடு, கோடம்பாக்கம்
சென்னை - 600 024

முதற் பதிப்பு:
ஜனவரி, 1976
500 படிகள்

அட்டைப் படம்:
திரு. கோபுலு

விலை ரூ. 3

© கி. ராஜேந்திரன்

அச்சிட்டோர்:
ஸ்ரீ பி, எல். எஸ். பிரஸ்
சென்னை -600 024

## பொருளடக்கம்

1. அதிர்ஷ்ட கவசம் ... 1
2. விவசாயச் சிறப்பு! 10
3. எந்த ஊர், ஸார்?... 23
4. பேச்சின்பம் ... 36
5. திருமயிலை வாத புரீசய்யர் ... 45
6. யார் தெரியுமா? நான்தான் ... 52
7. அரசியல் பரீட்சை... 61
8. வியாதிக்கு ஸ்நானம் ... 66
9. ஹாஸ்ய விபத்துக்கள்! ... 75

## மகிழ்ச்சி பொங்கட்டும்!

## எங்கும் பரவட்டும்!

தம் காலத்தில் வாழ்ந்த ஆனந்தக் கலைஞர் ஒருவரைப் பற்றிக் கல்கி எழுதுகையில், 'பரோபகாரங்களில் மிகச் சிறந்த பரோபகாரம் எது என்று எண்ணிப் பார்த்தால், 'வாழ்க்கையில் மகிழ்ச்சி இல்லாமல் காலங்கழிப்பவர்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதுதான்!' என்று சொன்னார்.

இப்படிச் சொன்ன கல்கியே இத்தகைய பரோபகாரம் செய்தவர்தான்!

— 'பொன்னியின் புதல்வரி'ல் சுந்தா

— கல்கி இதழ் டிசம்பர் 28, 1975

கல்கி அவர்களின் நகைச் சுவை எழுத்தால் எத்தனையோ பேர் கவலைகளை மறந்து சிரித்தனர்; சிரித்துக்கொண்டு இருக்கின்றனர்!

இத்தகைய மகிழ்ச்சி பொங்கச் செய்கிற பரோபகார காரியத்தை, பாலரவி நிறுவனமும் மேற்கொண்டிருக்கிறது. 'ஆனந்த ஓவியம்' என்ற தலைப்பில் பல்வேறு நகைச் சுவை எழுத்தாளர்களின் ஹாஸ்யப் படைப்புகளை நூல் வடிவில் பிரசுரிக்கத் திட்டமிட்டிருக்கிறது.

நகைச் சுவை எழுத்தாளருள் முதல் எழுத்தாளரான கல்கியின் நூலை இந்தத் தொடரில் முதல் புத்தகமாக வெளியிடுகிறார் பாலரவி பிரசுரத்தின் உரிமையாளர் திரு. வேங்கடராமன்.

கல்கி அவர்கள் எழுதிய இக்கட்டுரைகள் இதுவரை நூல் வடிவம் பெறுதவை. இவைகளை வெளியிட்ட ஆனந்த விகடன் பத்திரிகைக்கு என் நன்றி உரித்தாகும். இதேபோல் இன்றுவரை நூல் வடிவில் அச்சாகாத அமரர் கல்கி அவர்களின் வேறு பல கதை, கட்டுரைகளையும் தொகுத்து நூல் வடிவம் பெறச் செய்யப் போகிறார் திரு. வேங்கடராமன்.

அவரது முயற்சி வெல்க! பொங்கும் மகிழ்ச்சி எங்கும் பரவுக!

சென்னை - 34
24 - 12 - 1975

கி. ராஜேந்திரன்
ஆசிரியர், 'கல்கி'

## சிரித்து மகிழுங்கள்!

உடலை வளமாக்கும் சிந்தனையுரமே ஹாஸ்யம்!

குடும்பச் சுமையைக் குறைப்பது சிரிப்பு!

போராட்ட வாழ்வில் இனிமை பயப்பது முறுவல்!

நல்வாழ்வுக்கு மருந்து நகைச் சுவை!

சமூகத்துக்கு வழிகாட்டுவது ஹாஸ்ய இலக்கியம்!

## படியுங்கள் 'ஆனந்த ஓவியம்'

உங்கள் துயரின் தத்துவம் விளங்கும்; நல்வாழ்வில் நம்பிக்கை வளரும்; இன்பமாக வாழ்ந்து, குடும்பத்துக்கும் சமூகத்துக்கும் நலமாற்றும் நற்பான்மை நன்கு பிறக்கும்.

பல்வேறு பிரபல நகைச் சுவையாளர்களின் கட்டுரை, கதைகளின் அரிய தொகுப்புகள் தொடரும்.

நூல் வெளியீட்டாளர்கள்

# 1. அதிர்ஷ்ட கவசம்

ஆச்சரியத்திஞல் பிரமித்துப்போய்விட்டேன், தலை கிறுகிறுவென்று சுழன்றது. அவன் என்னைப் பிடித்துக் கொண்டிரா விட்டால் மயக்கம் போட்டுக் கீழே விழுந்திருப் பேன். மெதுவாகச் சமாளித்துக்கொண்டு மறுபடியும் உற்றுப் பார்த்தேன். கண்ணைத் துடைத்துக்கொண்டு பார்த்தேன்! இராமசாமிதான்; சந்தேகமில்லை. எனக்கு மண்டை வெடித்துவிடும் போலிருந்தது (என்பதாக டாம்பீகம் கிருஷ்ணசாமி ஐயங்கார் எம். ஏ., பி. எல்., கதை சொல்ல ஆரம்பித்தார். அவரைச் சூழ்ந்து பத்துப் பன்னிரண்டு வக்கீல்கள் உட்கார்ந்திருந்தார்கள். அன்றைய தினம் நீதிபதியின் வீட்டு எருமை மாடு கன்றுக்குட்டி போட்ட காரணத்திஞல் நீதிபதி வருவதற்கு நேரமாயிற்று. இதுதான் தருணமென்று டாம்பீகம் ஐயங்கார் தொடங்கிஞர் தமது கதையை).

*　　*　　*　　*

சென்னைக் கடற்கரைச் சாலையில் காற்று வாங்கிக் கொண்டு - அதாவது மீன் நாற்றத்தை முகர்ந்துகொண்டு - ஒரு நாள் நடந்து சென்றேன். வழக்கம்போல் சாலையோர மாக வரிசையாய் மோட்டார் வண்டிகள் நின்றுகொண் டிருந்தன. சாதாரணமாக நான் அவ் வண்டிகளைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. எனக்கும் மோட்டாருக் கும் பரம்பரையான பகைமை. உங்களில் மோட்டார் வண்டி சொந்தத்திற்கு வாங்க முடியாதவர்கள் அனைவரும் என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதை நன்கறி வேன். ஆகையிஞல்தான் இதைத் தைரியமாக வெளியிடு கிறேன். ஆஞல், இன்று தற்செயலாக அந்த வண்டிகளில் ஒன்றினுள்ளே என் பார்வை சென்றது. அங்கு இருந்தது

யார் என்று நினைக்கிறீர்கள்? என் பழைய நண்பன் இராம சாமிதான்!

மன்னிக்க வேண்டும். என் பழைய நண்பன் இராம சாமியை மோட்டாரில் கண்டதில் என்ன அதிசயம் என்று உங்களுக்குத் தெரிந்திருக்க முடியாதல்லவா? அவன் மோட்டாரில் இருந்ததுமட்டுமே அதிசயமன்று; அது அவனுடைய சொந்த மோட்டாராயிருக்கலாமென்றும் தோன்றிற்று!

அவனுடைய நடை, உடை பாவனைகள் அவ்வாறு இருந்தன. காதில் டால் வீசிய வைரக் கடுக்கண் ஜோடி இரண்டாயிரம் ரூபாய்க்குக் குறைவில்லை. 'நேவி புளூ' சட்டைமட்டும் 60 ரூபாயிருக்கும். இவற்றிற்கேற்ப மற்றவையும். என்ன விந்தை! முகத்தில் களைகூட அல்லவா மாறிவிட்டது! கடைசியாக, நான் அவனைப் பார்த்தபோது முகத்திலே தரித்திர தேவி தாண்டவமாடிக்கொண் டிருந் தாள். ஒரு 'கப்' காப்பிக்கென்று என்னிடம் ஒன்றே காலணு கடன் வாங்கிக்கொண்டு போனுன். இப்போது அவன் முகத்திலே அஷ்ட லக்ஷ்மியும் (அல்லது எவ்வளவு லக்ஷ்மிகள் உண்டோ அவ்வளவு பேரும்) குடிகொண் டிருந்தார்கள். என்னைப் போல இருநூறு பேரை விலக்கு வாங்கிவிடக் கூடியவனுய்த் தோன்றினுன்.

"அடே ராமு, கடைசியில் உனக்கு அதிர்ஷ்டம் அடித்து விட்டதா என்ன?" என்று கேட்டேன்,

"ஆமாண்டா கிட்டு! அதிர்ஷ்டமென்ருல் சாமான்ய அதிர்ஷ்டமன்று, பெரும் புயற் காற்றைப்போல் அடித்து விட்டது!" என்ருன்.

"உன்னைப பார்த்தால் அப்படித்தான் காண்கிறது. ஆனுல், நீ உண்மையிலேயே நீதானு? வேறு யாராவதா? நிஜத்தைச் சொல்" என்றேன் (என் மூளை எவ்வளவு கலங்கி யிருக்க வேண்டுமென்று இதிலிருந்தே நீங்கள் ஊகித்துக் கொள்ளலாம்).

"நான், நானேதான். சந்தேகமேயில்லை. இது என் னுடைய சொந்த மோட்டார் வண்டிதான். 9000 ரூபாய்

கொடுத்து வாங்கினேன். மயிலாப்பூரில் 60,000 ரூபாய்க்குப் பங்களா வாங்கியிருக்கிறேன். பாங்கியில் 2 லட்சம் ரூபாய் ரொக்கமாயிருக்கிறது. உன்னை நான் மறந்துவிடவில்லை. இந்த வருஷம் கோடைக் காலத்துக்கு உதக மண்டலம் போகப் போகிறேன். உன்னை அழைத்துக் கொண்டு போகலாமென்று நினைத்தேன். என்ன சொல்லுகிருய்?'' என்ருன் ராமு.

''கொஞ்சம் பொறு; கொஞ்சம் பொறு. சற்றே என் மூளை சரியான நிலைமைக்கு வரட்டும்'' என்று சொல்லி, என் நெற்றியை இரண்டு முறை பிடித்துவிட்டேன். பிறகு சிறிது நிதானித்து, "ஆமாம், உனக்கெப்படித்தான் அதிர்ஷ்டம் வந்தது? புதையல் கிதையல் எடுத்தாயா? இரகசியம் எதுவுமில்லாவிடில் சொல்லு'' என்றேன்.

நல்லது. இந்தச் சந்தர்ப்பத்தில் இராமசாமியின் பழைய கதையைப்பற்றி உங்களுக்குச் சிறிது கூறவேண்டும். நானும் இராமசாமியும் ஒரே பள்ளிக்கூடத்தில் படித்தவர்கள். அந்த நாளிலிருந்து அவனுக்குத் 'துரதிர்ஷ்ட ராமு' என்ற பட்டப் பெயர் வழங்கலாயிற்று. பரீட்சையில் மொத்தம் ஐந்து பாடங்கள் இருந்தால் அவன் நாலு நாலு பாடங்களில் 100க்கு 70, 80 வீதம் மார்க்கு வாங்குவான். ஒரு பாடத்தில்மட்டும் 34 மார்க்கு பெறுவான் (அதாவது பரீட்சை தேறுவதற்கு எவ்வளவு மார்க்கு வேண்டுமோ அதைவிட ஒன்றே ஒன்றுதான் குறைவாயிருக்கும்). ஆகவே, ஐந்தாவது வகுப்பில் என்னுடன் சேர்ந்து படித்த அவன், நான் பி. ஏ. பரீட்சையில் தேறியபோது, ஸ்கூல் பைனல் பரீட்சைக்கு மூன்ருவது தடவையாகப் போனுன். வழக்கம்போல் ஒரு பாடத்தில் ஒரு மார்க்கு குறைவினுல் பரீட்சை தவறிவிட்டது.

பிறகு, அவன் வாழ்க்கைப் போராட்டத்தில் இறங்கினுன். அரசாங்க உத்தியோகத்தை அவன் எப்போதுமே வெறுத்து வந்தான். ஆயினும் அவனுக்குப் பெண்ணைக் கொடுத்த மாமனுரின் பிடிவாதத்தின்பேரில் ரெயில்வே கம்பெனியில் மாதம் 150 ரூபாய் சம்பளத்தில் உத்தியோகம்

ஏற்றுக்கொள்ளச் சம்மதித்தான். அப்போது நான் பி.எல்., பட்டம் பெற்று, வக்கீல் தொழிலில் மாதம் 50 ரூபாய்கூட வருமானமில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண் டிருந்தேன். எனவே, என் நண்பனின் அதிர்ஷ்டத்தைக் குறித்துச் சிறிது பொறாமை கொண்டேன். ஆனால், விரைவிலேயே பொறாமைக்கிடமில்லாமல் போயிற்று. ஏனென்றால், உத்தியோக நியமன உத்தரவு நாளைக்கு வருமென்று என் நண்பன் எதிர்பார்த்துக்கொண் டிருந்த அன்று, அவனுடைய மாமனாருக்கு வேண்டியவரான துரை காலமாகிவிட்டார். கொஞ்ச நாளைக்கெல்லாம் அவன் மாமனாருக்கே உத்தியோகம் போய்விட்டது.

பள்ளிக்கூடத்தில் படித்த காலத்திலேயே அவனுக்கு இயந்திரங்கள் சம்பந்தமாக அதிக ஊக்கம் உண்டு. எனவே, தன்னிடமிருந்த சொத்தைப் பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டான். ஒரு வருஷம், இரண்டு வருஷமன்று, ஏழு வருஷ காலம் அதிலேயே அமிழ்ந்திருந்தான். கடைசியாக, ஓர் ஆகாய விமானத்தைக் கட்டி முடித்து, அதை இரண்டு லட்சம் ரூபாய்க்கு வாங்கிக் கொள்ளும்படி பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எழுதினான். எவ்வளவோ ஞாபகக் கடிதங்களும், ரிஜிஸ்டர் கடிதங்களும், விண்ணப்பங்களும், கண்டனங்களும் அனுப்பிப் பார்த்தும் அரசாங்கத்தினிடமிருந்து பதில் வரவேயில்லை.

இரண்டு வருஷங் கழித்து, அவன் முதல் முதலில் அரசாங்கத்துக்கு எழுதிய கடிதம் திரும்பி வந்து சேர்ந்தது. அதன் அடியில், 'மணிக்கு 200 மைல் வேகம் போகக்கூடிய ஆகாய விமானங்கள் வந்துவிட்டபடியால் மணிக்கு 20 மைல் போகக்கூடிய விமானத்துக்குத் தற்காலம் உபயோகமில்லை' என்று எழுதியிருந்தது.

ராமு இதனால் சோர்வடையவில்லை. ஆகாய விமானம் செய்த முயற்சியில் இயந்திரங்கள் சம்பந்தமான அநுபவம் தான் அதிகம் பெற்றுவிட்டதாகவும், ஜனங்களுக்கு மிகவும் உபயோகமான ஓர் இயந்திரம் செய்யப் போதாகவும் அவன் சொல்லித் தன் நண்பர்களிடமிருந்து கொஞ்சம் பணம்

வசூலித்தான். அவன் கூறியது பொய்யன்று. உண்மையாகவே முதல் தரமான அறுவடை இயந்திரம் ஒன்று அவன் செய்தான். ஆனால், விவசாயிகள் அந்த இயந்திரத்தை வாங்கமட்டும் முன்வரவில்லை. ஏனென்றால், ஆட்களைக் கொண்டு நெல் அறுப்பதற்குப் பத்து ரூபாய் பிடிக்குமென்றால், அவனுடைய இயந்திரத்தைக் கொண்டு அறுப்பதற்கு முப்பது ரூபாய் ஆவதாயிருந்தது.

ராமு இதை ஒப்புக்கொள்ளவில்லை. தன் இயந்திரத்தின் சக்தியை நிரூபித்துக் காட்டுவதற்காக அவன் விவசாயத்தை மேற்கொண்டான். இதற்காக அவன் பாலைவனம் போலிருந்த ஒரு பொட்டைக் காட்டில் 200 ஏக்ரா நிலம் தர்க்காஸ்து எடுத்தான். ஐந்து வருஷ காலத்தில் மேற்படி நிலத்தின் பெறுமானம் ஒரு லட்சம் ரூபாய் ஆகி விடுமென்று அவன் கூறினான். இதை நம்பிச் சிலர் அவனுக்குக் கடன் கொடுத்தார்கள். நிலம் நன்றாகப் பண்படுத்தப்பட்டது. ஆனால், பாதாள லோகம் வரைக்கும் வெட்டியும் தண்ணீர் மட்டும் கிடைக்கவில்லை.

ராமுவிடம் ஒரு பெரிய விசேஷமென்னவென்றால், எவ்வளவுதான் தோல்வியுற்றாலும் அவன் உற்சாகம்மட்டும் குன்றுவதில்லை. அளவிலாத ஊக்கத்துடனும் பிடிவாதத்துடனும் அவன் புதிய துறைகளில் திரும்பத் திரும்ப முயற்சி செய்துவந்தான். விவசாயம் பயனில்லாமற் போனதும், அவன் ஒரு செட்டியாருடன் சேர்ந்து லாபத்தில் கூட்டு என்பதாக ஏற்பாடு செய்துகொண்டு சீமை ஜவுளி வியாபாரம் தொடங்கினான். இது 1921ஆம் வருஷத்தில். எல்லோரும் அப்போது பித்துப் பிடித்தவர்கள் போல் சீமைத்துணிகளைக் கொளுத்தி வந்தார்கள். உங்களுக்குத்தான் தெரியுமே; நான்கூட அந்த வருஷத்தில் மூன்றே வருஷம் உபயோகப் படுத்தியிருந்த புத்தம் புதிய கிளாஸ்கோ மல் ஒன்றை நெருப்பில் போட்டுவிடவில்லையா? இந்தக் கொள்ளையில் சீமைத்துணி யார் வாங்கப் போகிறார்கள்? ஆகவே வருஷக் கடைசியில் கணக்குப் பார்த்தபோது 1,200 ரூபாய் நஷ்ட

மாகியிருந்தது. பிறகு கொஞ்ச காலம் ராமுவைக் காணவேயில்லை.

ஆறு மாதத்திற்குப் பிறகு மறுபடியும் அவன் திடீரென்று முளைத்தான். அந்தத் தடவை அவன் செய்த யோசனை கட்டாயம் அவனுக்கு அதிர்ஷ்டம் கொண்டுவரப் போகிறதென்று நான்கூட நினைத்துவிட்டேன். இங்கிருந்து எட்டு மைல் தூரத்திலுள்ள அல்லிப்பாக்கம் என்னும் கிராமம் உங்களுக்குத் தெரியுமல்லவா? அந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஏரியில் ஒரு பெரும் பகுதியை அவன் விலைக்கு வாங்கினான். அவனுடைய மனைவியின் பெயரால் இருந்த கொஞ்சம் சொத்தை விற்று இதற்காக அவன் பணம் கொண்டு வந்திருந்தான். சென்னைப்பட்டணத்திலேயே மத்திய வகுப்பை சேர்ந்த உத்தியோகஸ்தர் குடியிருக்க இடமில்லாமல் மிகவும் திண்டாடுகிறார்களென்றும், நாளடைவில் ஜனங்கள் பட்டணத்துக்குச் சுற்றுப் புறங்களிலே வீடு கட்டிக்கொண்டு வசிக்கத் தொடங்குவார்களென்றும் அவன் எதிர்பார்த்து இந்தக் காரியம் செய்தான். எப்படிப்பட்ட புத்திசாலி, பாருங்கள்! அவன் எதிர்பார்த்தபடிதான் நடந்தது. ஆனால் அதிர்ஷ்டந்தான் மறுபடியும் குறுக்கே நின்றது. எப்படியோ மாம்பலத்தின்மீது எல்லோருக்கும் மோகம் விழுந்துவிடவே அல்லிப்பாக்கத்தைத் திரும்பிப் பார்ப்பார் இல்லை.

சென்னைப்பட்டணத்தில் மோட்டார் பஸ் விடும் யோசனை முதன் முதலில் யார் மூளையில் உதயமாயிற்று, உங்களுக்குத் தெரியுமா? அந்த ரகசியத்தை இப்போது வெளியிடுகிறேன்: என் நண்பன் ராமுவின் மூளையில் தான். ஆனால் அவனைப் பிடித்த துரதிருஷ்டம்மட்டும் விடவில்லை. ராமுவைப் பார்த்துப் மோட்டார் பஸ் வாங்கிவிட்டவர்கள் அந்தக் காலத்தில் பதினாயிரம், இருபதினாயிரம் சம்பாதித்துவிட்டார்கள். ஆனால் ராமுவின் மோட்டார் பஸ், வாங்கிய இரண்டாவது மாதத்திலேயே குடைகவிழ்ந்து தான் உடைந்ததோடில்லாமல் ஒரு பெண் பிள்ளைக்கும், ஒரு குழந்தைக்கும் எமனாய் முடிந்தது.

பின்னர் அந்த மூதேவியின் முகத்திலேயே விழிப்பதில்லை என்று ராமு தீர்மானித்துவிட்டான்.

கூடைசியாக ராமு தலையிட்ட முயற்சியில் நான்கூட ஏமாந்து 200 ரூபாய் தொலைத்துவிட்டேன். மேல்நாடுகளில் நடப்பது போல் முதல்தரமான தமிழ் வாரப் பத்திரிகை ஒன்று தொடங்குவதற்கு அவன் ஏற்பாடு செய்தான். இது நல்ல யோசனை என்பதை உங்களில் யாராவது மறுப்பீர்களா? மாட்டவே மாட்டீர்கள்! ஆனால் உங்களுக்கு ஒரு விஷயம் தெரியாது: ராமுவுக்கும் அப்போது அந்த விஷயம் தெரிந்திருக்கவில்லை. அது என்னவென்றால், தமிழ் நாட்டில் மாதந்தோறும் 300 தமிழ் வாரப் பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டு அத்தனையும் மாண்டு வருகின்றன என்பதே. தமிழ் நாட்டில் வாரப் பத்திரிகை ஒன்று நன்றாக நடைபெறவேண்டுமானால் அதற்கு மூன்றே மூன்று வழிதான் உண்டு. ஒன்று, பத்திரிகாசிரியர் பிரபல அரசியல் கட்சித் தலைவராய் இருக்கவேண்டும்; அல்லது வசைமொழி பாடுவதில் அளவில்லாத ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். அல்லது, பத்திரிகையைச் சந்தா இல்லாமல் இனமாக வழங்க வேண்டும். இந்த மூன்று வகை யோக்கியதைகளும் என் நண்பனுக்கு இல்லை. ஆகவே, அவன் பத்திரிகையை எவ்வளவோ திறமையாக நடத்தியும் ஆறாவது மாதத்தில் அது செத்தொழிந்தது!

மேற்படி இழவுச் செய்தியை என்னிடம் சொல்லிவிட்டுத்தான் பாவம், துரதிருஷ்ட ராமு ஒரு கப் காப்பிக்கென்று ஒன்றே காலணா வாங்கிக்கொண்டு போனான். அதை அவன் வழக்கம்போல் 'கடன்' என்று கேட்டாயினும் அவனிடம் திரும்பி வாங்கிக்கொள்ளும் எண்ணமே எனக்கு இல்லை. அப்படிப் போனவன் சொந்த மோட்டார் வண்டியில் வந்து கடற்கரையில் காற்று வாங்கியதைக் கண்டபோது — ஏன்? நீங்கள் யாரேனுமாயிருந்தால் ஆச்சரியத்தினால் மூர்ச்சையடைந்து இறந்து போயிருப்பீர்கள். இருக்கட்டும், நான் ஆரம்பித்த கதையை எந்த இடத்தில் விட்டேனென்பது உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதல்லவா?

"ஆமாம். அதிர்ஷ்டம் எந்த வழியாக வந்தது? புதையல் ஏதேனும் அகப்பட்டதா?" என்று ராமுவைக் கேட்டேன்.

"புதையலுமில்லை; ஒன்றுமில்லை. நான் சொன்னால் நம்ப மாட்டாய்?" என்றான் ராமு.

உடனே அவன் தன் உட்சட்டையின் பொத்தான்களை அவிழ்த்தான். கழுத்தில் ஒரு மெல்லிய கறுப்புக் கயிற்றில் கட்டித் தொங்கவிட்டிருந்த எண்கோண வடிவமான ஒரு வெள்ளித் தகட்டைக் காட்டினான். அதிலே ஏதோ எழுத்துக்கள் கிறுக்கப்பட்டிருந்தன.

"இது என்ன?"

"இதுதான் மகாசக்தி அதிர்ஷ்ட கவசம்."

"சரி, அப்புறம்?"

"இந்தக் கவசத்தின் மூலமாகத்தான் எனக்கு அதிர்ஷ்டம் வந்தது."

நான் கொல்லென்று சிரித்தேன். "கதை விடாதே!" என்றேன்.

"பார்த்தாயா? நீ நம்பமாட்டாய் என்று நான் சொன்னேனல்லவா? ஆயினும் உண்மை அதுதான்."

"இதோ பார், ராமு! என்னைப் பைத்தியக்காரன் என்று எண்ணாதே! இந்தக் காலத்தில் இந்த மாதிரி உடான்ஸை யார்தான் நம்புவார்கள்? உண்மையைச் சொல்."

"சத்தியமாகச் சொல்கிறேன். இந்தக் கவசந்தான் எனக்கு அதிர்ஷ்டம் கொண்டு வந்தது."

"நல்லது! நீ அதை நிரூபித்துவிட்டாயானால் நான் என் வக்கீல் தொழிலை விட்டுவிட்டு, உச்சிக் குடுமி வைத்துக் கொண்டு கையில் ஜபமாலையுடன் உட்கார்ந்து விடுகிறேன்."

"ஜாக்கிரதை. அப்புறம் வாக்குத் தவறக் கூடாது."

"நீ என்னதான் சொல்கிறாய்? இந்த அதிர்ஷ்ட கவசம் அணிந்த பிறகு உன் ஆகாய விமானத்தை அரசாங்கத்தார் வாங்கிக்கொண்டார்களா? அல்லது, தர்க்காஸ்து எடுத்த நிலத்தில் தண்ணீர் கிடைத்துவிட்டதா? அல்லது அறுவடை இயந்திரம் . . . . ."

"இல்லையப்பா, இல்லை! அவற்றிற்கெல்லாம் தலை முழுகி விட்டேன். இப்பொழுது பணம் சம்பாதிக்கும் வேலையில் இறங்கியிருக்கிறேன்."

"எப்படி? எப்படி?"

"மகாசக்தி அதிர்ஷ்ட கவசத்தைப்பற்றி நீ ஏற்கெனவே கேள்விப்பட்டதே கிடையாதோ?"

"கேள்விப்படாமலென்ன? பத்திரிகையில் பெரிய பெரிய விளம்பரங்கள்கூடப் பார்த்திருக்கிறேன். ஆனால் மறுபடியும் பழைய கதைக்கே வருகிறாயே?"

"அவசரப்படாதே! அந்த மகாசக்தி அதிர்ஷ்ட கவசந்தான் நான் அணிந்திருப்பது. அதைச் செய்பவனும் நான்தான். மாதம் 5,000 கவசங்களுக்குக் குறையாமல் விற்கிறேன். பர்மா, சிங்கப்பூர், தென் அமெரிக்கா. கம்போடியா, நெட்டால் முதலிய இடங்களிலிருந்தெல்லாம் என் கவசத்துக்கு ஆர்டர் வருகிறது. விளம்பரச் செலவுகளெல்லாம் போக, மாதம் எனக்கு 4,000 ரூபாய் கிடைக்கிறது. கிட்டு! நீயும் ஒரு கவசம் வாங்கி இதன் சக்தியைச் சோதித்துப் பார்க்கலாமே? விலை இரண்டே ரூபாய்தான். ஒன்று வி. பி. பி. யில் அனுப்பி வைக்கட்டுமா?" என்று சொல்லிக்கொண்டே ராமு மோட்டாரைச் செலுத்தத் தொடங்கினன்.

அதிர்ஷ்டம் அடித்தாலும் இப்படியல்லவா அடிக்க வேண்டும்? (என்று கூறி டாம்பீகம் ஐயங்கார் தம் கதையை முடித்தார். இதற்குள்ளாக எருமையின் பிரசவம் ஆகி நீதிபதி வந்துவிடவே வக்கீல்கள் எல்லோரும் கோர்ட் மண்டபம் போய் சேர்ந்தார்கள். ஓம் தத் ஸத்.)

# 2. விவசாயச் சிறப்பு!

என்னுடைய விவசாய ஞானத்தை உலகிற்கு வெளிப் படுத்த இதைவிட நல்ல சந்தர்ப்பம் கிடைக்குமென்று தோன்றவில்லை. நேயர்கள் சிலருக்கு இதைப்பற்றிச் சந்தேகம் உதிக்கலாம். 'என்னடா இது? ஒரு பக்கம் லண்டனில் வட்ட மேஜை மகாநாடு கூடிச் சக்கர வட்டமான பேச்சுக்கள் தடபுடல்படுகின்றன; மற்ருெரு பக்கம் இந்தியாவில் ராஜீய நிலைமையில் கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. விவசாயத்தைப்பற்றி எழுத இதுதானு சமயம்? தாடி பற்றி எரியும் பொழுது சுருட்டுக்கு நெருப்புக் கேட்ட கதையாகவல்லவா இருக்கிறது?' என்று நினைக்கலாம்.

*　　　*　　　*　　　*

ஆனுல் மேற்சொன்ன பழமொழி இந்தச் சந்தர்ப்பத்துக்கு அவ்வளவு பொருத்தமில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். 'ரோமாபுரி பற்றி எரிகையில் நீரோ பிடில் வாசித்தது போல்' என்பதாக ஆங்கிலத்தில் மற்ருெரு பழமொழி உண்டு. இந்தச் சமயத்துக்கு இதுதான் பொருத்தமென்று தோன்றுகிறது. நீரோ சக்கரவர்த்தி பிடில் வாசிக்க எவ்வளவு நல்ல தருணம் பார்த்தான் பாருங்கள்! வேறு யாருடைய காதிலும் பிடில் சத்தம் விழுந்து அவர்கள் காது புண்ணுகாமல், எல்லோரும் ஓடிப்போன சமயம் பார்த்துப் பிடிலை எடுத்துக்கொண்டான்! என்ன கருணை! என்ன தயை! அக்கம் பக்கத்து வீடுகளில் பிடில், ஹார் மோனியம் கற்றுக்கொள்வார் எல்லாரும் இவ்வளவு கருணையுடன் நடந்துகொண்டால் எவ்வளவு நன்ருயிருக்கும்?

*　　　*　　　*　　　*

ஆகையினுல்தான், நானும் இவ்வளவு நல்ல சமயம் பார்த்தேன். தேசத்தில் இவ்வளவு பெரிய ஆர்ப்பாட்டம்

நடந்துகொண் டிருக்கையில், விவசாயத்தைப்பற்றி யார் படிக்கப்போகிறார்கள் என்றல்லவா கேட்டீர்கள். அதே தைரியத்தினால்தான் நான் இதை எழுதத் தொடங்குகிறேன். ஊரெல்லாம் தீப்பற்றி எரிகையில், நமது பிடில் வாத்திய சப்தத்தை யாரும் கேட்க மாட்டார்களென்று நீரோ தைரியமாய்த் தொடங்கியதுபோல, ஒருவரும் படிக்க மாட்டார்கள் என்ற தைரியம் இருக்குபோது நான் என்ன 'கதை' விட்டால்தான் யார் கேட்கப் போகிறார்கள்?

* * * *

ஆனால் இந்தக் கட்டுரை நான் எழுதத் தொடங்கியதற்கு உண்மைக் காரணம் என்னவென்பதையும் உங்களுக்குச் சொல்லிவிடவேண்டும். கொஞ்ச நாளைக்குமுன் நான் கோயமுத்தூர் விவசாயக் கல்லூரியைப் பார்க்கப் போயிருந்தேன் அங்கே என் [illegible]தையை முக்கியமாகக் கவர்ந்தது என்னவென்றால் கல்லூரி ஆசிரியர்களின் வாசஸ்தலமே யாகும். நாற்சதுரமாயமைந்த பசும்புற் கம்பளம் விரித்த விசாலமான மைதானம். அதன் நான்கு புறங்களிலும் சிறிதும் கோணலின்றி நேராக அமைத்த அழகிய சாலைகள். அச்சாலைகளின் இரு புறங்களிலும் தழைத்துப் படர்ந்திருந்த இனிய பசுமரங்கள். அச்சாலைகளுக்கப்பால் இருந்த அழகிய சிறு வீடுகள்; அவ் வீடுகளின் முன்னால் வைத்துப் பயிராக்கிய இனிய பூஞ் செடிகள்; விதவிதமான வர்ண இலைகள் உள்ள செடிப் புதர்கள்; தேவ மகளிர் போல் அச்செடிகளினிடையே உலாவிக்கொண்டிருந்த கற்பரசிகள்; 'குழலும் வீணையும் யாழு மென்றினைய குழைய' அவ்வீடுகளினின்று எழுந்த இன்ப கீதங்கள், அந்தக் கீதங்களைச் சுமந்து பூஞ்செடிகளில் தவழ்ந்து வந்த குளிர் பூந் தென்றல் ஆகிய இவைகளினாலெல்லாம் என் மனம் பரவசமடைந்துவிடவே, "ஆகா! விவசாயத்தின் பெருமையே பெருமை!" என்று வியந்துரைத்து நின்றேன். ஔவை, வள்ளுவர், கம்பர் முதலாயினோர் உழவின் சிறப்பைக் குறித்துப் பாடியனவெல்லாம் நினைவிற்கு வந்தன.

* * * *

ஆனல் அவர்களெல்லாம் உழுதுண்டு வாழ்வதைப் பற்றியே சொல்லுகிறுர்கள்:

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் — மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

என்று வள்ளுவரும்,

'உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை — கண்டீர்
பழுதுண்டு வேறுேர் பணிக்கு'

என்று ஔவையும் கூறுகின்றனர். இக் கூற்றுக்களைக் குறித்து நிரம்ப அபிப்பிராய பேதத்துக்கு இடமிருக்கிறது, முக்கியமாக, உழுதுண்டு வாழும் ஜனங்கள் இக்காலத்தில் இதற்கு நேர்மாருன அபிப்பிராயம் தெரிவிக்கிறுர்கள். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியைக் குறித்துப் பிரிட்டிஷாருக்கும் இந்தியர்களுக்கும் எவ்வளவு அபிப்பிராய பேதம் உண்டோ அவ்வளவு இந்த விஷயத்திலும் காணப்படுகிறது. ஆனல் ஒன்று பரம நிச்சயம்: உழுதுண்டு வாழ்தல் நல்லதோ கெடுதலோ, கஷ்டமோ சுகமோ, எப்படியாஞலும் சரியே, உழுதுண்ணக் கற்பித்து வாழ்தல் பரம சுகமான வாழ்வு என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. நம்பிக்கையில்லாதவர்கள் தயவு செய்து கோயமுத்தூர் விவசாயக் கலாசாலைக்குப் போய் பாருங்கள். இந்த ஜன்மத்தில் இல்லாவிடினும் அடுத்த ஜன்மம் எடுத்தாவது விவசாயக் கலாசாலையில் ஆசிரியராக வேண்டுமென்று கடவுளை வேண்டுவீர்கள். இது நிற்க.

விவசாயக் கலாசாலையையும் அக்கலாசாலை ஆசிரியர்கள் வசிக்குமிடங்களையும் பார்த்ததும் விவசாயத்தின் அருமை பெருமைகளைக் குறித்து எழுத வேண்டுமென்ற எண்ணம் பிறந்தது. ஆனல் விவசாயத்தைப்பற்றி எழுத வேறு யோக்கியதை எதுவும் எனக்கில்லை யென்று எண்ணி விடாதீர்கள். விவசாயக் கல்வி, விவசாய அநுபவம் இரண்டும் எனக்கும் உண்டு, பள்ளிக்கூடத்தில் நெல், பருத்தி, காப்பிக் கொட்டை, உருளைக்கிழங்கு, பீட்ரூட், புகையிலை முதலியவைகளைப்பற்றிப் பாடம் படித்திருக்கிறேன். ஏன்? விவசாயத்தைப்பற்றிக் கட்டுரை எழுதிப் பரிசுகூடப் பெற்

றிருக்கிறேன் என்பதை உங்களுக்குத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 'நெற்பயிர்' என்பதைப்பற்றிய அக் கட்டுரையில் எனது விவசாயக் கல்வியின் முழுச் சாராம்சம் அடங்கியிருந்தது என்று சொல்லலாம். ஆகவே, அக் கட்டுரையின் சுருக்கத்தை முதலில் இங்கே தந்துவிட்டு. அப்புறம் என் விவசாய அநுபவங்களைப்பற்றிக் கூறப் புகுதல் நல்லதல்லவா?

## நெல்

நெல் என்பது ஒரு வகைச் செடியில் காய்க்கும் தானியமாகும். அது மரத்தில் காய்க்கும் ஒரு வகைப் பழம் என்பதாகச் சில விவசாய நிபுணர்கள் சொல்லுகிறார்கள். இது முற்றும் தவறான கொள்கை என்பது இந்தியாவில் பிறந்த குஞ்சு குழந்தை எல்லோருக்கும் தெரியும். நெல் உண்டாவது செடியிலேயேயன்றி மரத்தில் அல்லவே அல்ல.

நெல் செடிக்குக் கிளைகள் இல்லை. ஆனால் இலைகள் உண்டு. பூ கிடையாது. அமெரிக்கா தேசத்தில் ஓர் அதிசயமான நெல் செடி இருப்பதாகவும், அது பூ பூப்பதாகவும் சொல்கிறார்கள்; ஆனால் இதைச் சொல்லக் கேட்டவர்களேயன்றிப் பார்த்தவர்கள் யாருமில்லை.

நெல்லானது செடியில் எந்தப் பகுதியில் காய்க்கின்றது என்பது அடுத்த கேள்வி; பல தேசங்களிலுமுள்ள பல விவசாய நிபுணர்கள் நீண்ட கால ஆராய்ச்சியின் பேரில், நெல்லானது செடியின் வேரில் காய்ப்பதில்லை என்ற ஒரு முகமான முடிவுக்கு வந்திருக்கிறார்கள், ஆகவே நாமும், இம் முடிவை ஏற்றுக்கொள்கின்றோம்.

ஆனால் நெல்லுக்கு வேண்டிய ஆகாரம் என்னவென்பதைப்பற்றி இதுவரையில் ஒரு முகமான முடிவு ஏற்படாதது மிகவும் வருந்தத்தக்கதே யாகும். நெல்லுக்கு முக்கியமாக வேண்டியது உரம் என்பர் சிலர். நெல்லின் பிரதான உணவு தண்ணீர்தான் என்பர் வேறு சிலர். உரமும் நீரும் அநாவசியம், வேண்டுவது சூரிய வெப்பமே என்று வற்புறுத்துவர் பின்னும் சிலர். ஆராய்ச்சியின்றி வெறும் அநுபவம்மட்டும் உள்ளவர்களோ இவை மூன்றும்

வேண்டுவனவே என்று குருட்டாம் போக்காய் அடிப்பார்கள்.

நெற் செடி பயிர் செய்வதற்குப் பல முறைகள் கையாளப்படுகின்றன. விதை தெளித்து, நாற்றுப் பிடுங்கி, உழுது பரம்படித்த வயல்களில் நடுவது ஒரு முறை. ஆனால் இது மிகவும் பழமையான கர்நாடக முறையாகும். குழி தோண்டி விதை போட்டுச் செடி முளைத்துப் பெரிதாய் வளர்ந்ததும், வேருடன் பிடுங்கித் துண்டு துண்டாய் வெட்டிச் சட்டிகளில் வைத்துப் பயிராக்குவது மற்றொரு முறை. நெற் செடிகளை ஒட்டுப் போடும் முறைகூட இக் காலத்தில் சிலரால் கையாளப்படுகிறதாம்.

நெல்லுச் செடி நன்கு வளர்ந்து அதன் இலைகள் பழுப்படையும் சமயத்தில் கொத்துக் கொத்தாய்ப் பிஞ்சுவிட்டுக் காய் காய்க்கிறது. காய் முற்றியதும் ஜனங்கள் அவைகளைப் பொறுக்கிச் சேர்ப்பார்கள். செடிகளை அடியோடு வெட்டி அவைகளைக் களத்தில் அடித்துத் தானியங்களை உதிர்த்துச் சேர்ப்பதுமுண்டு. அதற்கு அறுவடை என்று பெயர். ஒவ்வொரு நெல்லுக்குள்ளும் ஒவ்வோர் அரிசி தான் இருக்கும். சில நெல்களில் அதுகூட இருக்காது. இவைகளுக்குப் பதர் என்று பெயர்.

ஜனங்கள் எதற்காக நெற்செடி பயிர் செய்கிறார்கள் தெரியுமா? நெல் நமக்கு உணவாகப் பயன்படுகிறது. இதைவிட வேறு நல்ல உபயோகம் எதுவும் இந்நாள் வரையில் நெல்லுக்குக் கண்டு பிடிக்கப்படவில்லை. ஆகையினால்தான் காருண்ய ஆங்கில துரைத்தனத்தார் நெல் சாகுபடி விஷயத்தில் அதிகக் கவனம் செலுத்தவில்லையென்பது பிரசித்தமான விஷயமாகும். உதாரணமாக, பருத்தி, சணல் முதலிய பயிர்களை எடுத்துக்கொண்டால், அவைகள் எவ்வளவு நல்ல வழிகளில் பயன்படுகின்றன! எத்தனை யெத்தனை அந்நிய முதலாளிகள் கொழுக்கவும் உபயோகமாகின்றன! நெல்லோ, கேவலம் ஏழை இந்தியர்களின் பாழ் வயிற்றை நிரப்புவதற்குமட்டுமே பயன்படுகிறது. ஆகையினால்தான் பிரிட்டிஷ் சர்க்கார் நெற்பயிர்

அபிவிருத்தி விஷயத்தில் அவ்வளவு கவலை செலுத்துவதில்லை. அப்படிக்கிருந்தபோதிலுங்கூட, இந்தியாவில் அன்னியத் துரைத்தனம் ஏற்பட்டபின்னர், அதற்குமுன் ஒரு படி நெல் காய்த்துக்கொண் டிருந்த நெற் செடிகள் இரண்டு படி காய்த்துத் தருகின்றன என்பது வெகு ஜன வாக்கு. இதற்கு முக்கிய காரணம் மேற்படி செடிகளுக்கு அதிகார வர்க்கத்தாரிடம் உள்ள 'காபரா'வே என்று சொல்லப்படுகிறது.

* * * *

ஏன்? என்ன நினைக்கிறீர்கள்? இவ்வளவு அற்புதமான கட்டுரைக்கு முதற் பரிசு கிடைத்ததில் ஏதேனும் ஆச்சரியமுண்டா? மொத்தம் 97 மாணுக்கர்கள் கட்டுரை எழுதினர்கள். கட்டுரையைச் சீர் தூக்கியவர்கள் ஒரு மாஜி தாசில்தார், ஒரு ராவ் பஹதூர், ஒரு கௌரவ ஜெயில் விஸிட்டர், ஒரு விவசாய நிபுணர் ஆகியவர்கள் அடங்கிய பஞ்சாயத்தார். இவர்கள் ஒருமுகமாக முதற் பரிசுக்கு என் கட்டுரையையே சிபார்சு செய்தார்கள். ஒரு ஜெர்மன் ஸில்வர் மெடல், சர்க்கார் விவசாய இலாக்கா வெளியிடும் விவசாயப் பஞ்சாங்கங்கள் ஒன்பது, பாரி கம்பெனியாரின் விளம்பரப் படங்கள் இருபது ஆகியவை எனக்குக் கிடைத்த பரிசுகள் ஆகும். ஜெர்மன் ஸில்வர் மெடலைக் கொடுத்துப் பேரீச்சம் பழம் வாங்கலாமென்று பார்த்தேன். ஆனல் ஒரு சுளைகூட அவள் கொடுக்க மறுத்துவிடவே கோபத்தில் வீசிச் சாக்கடையில் எறிந்தேன். பஞ்சாங்கங்கள் பற்பொடி மடித்துத் தீர்ந்து போயின. விளம்பரப் படங்களை வயலில் போட்டு உழும்படி என் தமையனருக்குத் தபாலில் அனுப்பினேன். அவர் என்ன செய்தாரோ தெரியாது.

* * * *

இனிமேல் என்னுடைய விவசாய அநுபவங்களைப் பற்றிக் கூற வேண்டும். நான் குடியிருக்கும் வீட்டுக்கு மேற்புறத்தில் வெற்றிடம் ஏராளமாயிருக்கிறது. சென்ற வருஷத்தில் எனக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றிற்று.

அந்தச் சமயத்தில் உணவாராய்ச்சியைப்பற்றிய ஒரு புத்தகம் படித்துக்கொண்டிருந்தேன்; அதில் உடல் நலத்துக்கு 'விட்டமின்'களின் அவசியத்தைப்பற்றியும், புதிய கறி காய்களில் 'விட்டமின்'கள் ஏராளமென்றும், ஆகையால் மனிதர்கள் புதிய காய்கறிகள் அதிகம் உட்கொள்ள வேண்டுமென்றும் எழுதியிருந்தது. வீட்டுக்குப் பக்கத்திலுள்ள வெற்றிடத்தில் ஏன் காய் கறிகள் பயிர் செய்யக்கூடாது என்பதாகப் பளிச்சென்று ஓர் எண்ணம் உதயமாயிற்று. பணத்துக்குப் பணம் மீதி, புத்தம் புதிய காய்கள் உடனுக்குடன் பறித்துக்கொள்ளலாம். இப்படி எண்ணி உடனே ஓர் ஆளைக் கூப்பிட்டுச் சுமார் பத்தடி சதுரத்திற்கு நன்கு கொத்தி வாங்கச் செய்தேன். முதன் முதல் கத்திரிச் செடி வைத்துப் பார்க்கிறதென்று தீர்மானம், கத்திரிச் செடிக்கு ஆட்டின் எருவைப் போட்டால் செழித்து வளரும் என்று சொன்னார்கள். இரண்டணுவுக்கு ஒரு கூடை ஆட்டெரு வாங்கி வந்து கொட்டச் செய்தேன். பிறகு இரண்டணுவுக்கு 20 கத்திரிச் செடிகள் வாங்கி வந்து நடச் செய்தேன். ஆளுக்குக் கூலி நாலணு கொடுத்தேன். அன்றிரவு மிகக் குதூகலத்துடன் அந்தச் செடிகளில் காய்க்கப் போகும் கத்திரிக்காய்களைப்பற்றி நானும் என் மனைவியும் பேசிக் கொண்டிருந்தோம். அவை காய்க்க ஆரம்பித்துவிட்டால் கறிகாய் விலைக்கு வாங்க வேண்டிய அவசியமே யிராது என்றேன் நான். "என்னதான் காய்த்தாலும் தினம் கத்திரிக் காயே சாப்பிட முடியுமா?" என்றாள் மனைவி. அப்படி மீந்துவிட்டால் கொத்துவால் சாவடி வியாபாரி யாருக்கேனும் கான்டிராக்ட் விட்டுவிடலாமென்று நான் கூறினேன். செடி பெரிதாகி ஒவ்வொரு செடியிலும் பத்துப் பதினைந்து கத்திரிக் காய்கள் பெரிது பெரிதாகத் தொங்குவதாகவும், அவைகளைக் கூட்டு செய்வதா, கறி பண்ணுவதா என்பதைப்பற்றி நானும் என் மனைவியும் சண்டை போட்டதாகவும் அன்றிரவு கனவு கண்டேன்.

* * * *

மறுநாள் காலையில் எழுந்ததும் முதல் காரியம்

கத்திரிக் கொல்லை பார்வைதான். ஆனால் செடிகளைப் பார்த்ததும் உற்சாகம் பெரிதும் குறைந்து போயிற்று. எல்லாம் சேர்ந்து துவண்டு கிடந்தன. கூலி ஆள் செடிகளைச் சரியாக நட்டானோ இல்லையோ, வேர் ஊன்றியதோ இல்லையோ வென்று சந்தேகம் உண்டாயிற்று. ஒரு செடியைப் பிடுங்கிப் பார்த்து இந்தச் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ளப் போனேன். அதற்குள் குழந்தை ராஜம் ஓடிவந்து, "ஐயோ மாமா! ஏன் செடியைப் பிடுங்குகிறீர்கள்?" என்றாள். நான் விஷயம் தெரிவித்தபோது, "முதலில் அப்படித்தான் வாடியிருக்கும். நாளைக்கெல்லாம் சரியாய்ப் போய்விடும். அதற்காக நட்ட செடியைப் பிடுங்கிப் பார்ப்பார்களா?" என்றாள். இந்த விஷயங்களெல்லாம் எந்த விவசாயக் கலாசாலையில் படித்து இவனுக்குத் தெரிந்தது என்று எனக்கு ஆச்சரியமாய்ப் போய்விட்டது.

* * * *

பதினைந்து நாட்கள் ஆயின. கத்திரிச் செடிகள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தன. இலைகள் தளதளவென்றிருந்தன. எனக்கும் என் மனைவிக்கும் குழந்தைகள் ராஜம், ராமு எல்லாருக்கும் காலையில் எழுந்ததும் முதல் வேலை கத்திரிச் செடிகளைப் பார்வையிடுவதுதான். கைகால் அலம்புவது, வாய் கொப்புளிப்பது எல்லாம் கத்திரிப் பாத்தியில்தான்! ஒரு சொட்டுத் தண்ணீர்கூட வீணுக்குவதில்லை. இன்னும் நாலைந்து நாளில் பூக்கத் தொடங்கிவிடலாமென்று எதிர் பார்த்தோம். இப்படியிருக்கையில் ஒரு நாள் திடீரென்று ராஜம், 'ஐயோ! மாமா! கத்திரிச் செடி போச்சு!" என்று கத்தினாள். நான் திடுக்கிட்டு, எழுதிக்கொண்டிருந்தவன் அப்படியே பேனாவைப் போட்டுவிட்டு, எழுந்து ஓடினேன். பார்த்ததும் வயிறு பகீர் என்றது. ஒரு பெரிய காளை மாடு கத்திரிப் பாத்தியில் புகுந்து நாவை நீட்டி நீட்டி ருசி பார்த்தது. அதன் இலைகளைக் காம்புகளுடன் உள்ளே தள்ளிக் கொண்டிருந்தது. எனக்குண்டான கோபத்தையும் எரிச்சலையும் சொல்லி முடியாது: 'இதென்ன அநியாயம்? கத்திரிச்

செடியை மாடு தின்னுமா, என்ன? இதை எந்தப் புத்தகத்திலும் படிக்கவில்லையே? யாரும் சொல்லிக் கேட்டதுகூடக் கிடையாதே! இந்த மாட்டின் சொந்தக்காரன்மேல் வழக்குத் தொடர்ந்தால் என்ன?' என்று யோசித்துக்கொண்டு நான் திக்பிரமை கொண்டவன்போல் நிற்கையில், ராஜம் மறுபடியும், "என்ன மாமா! மாடு செடிகளை அழிக்கிறது. சும்மா நிற்கிறீர்களே?" என்று கூவினாள். உடனே நான் விழித்துக் கொண்டு மாட்டின் கொம்பைப் போய்ப் பிடிக்கப் போனேன். ஆனால் அந்தப் பொல்லாத மாடு கொம்புகளை ஓர் ஆட்டம் ஆட்டி என்னை முட்ட வந்தது.

* * * *

நல்ல வேளையாக இதற்குள் ராமு எங்கிருந்தோ ஓடி வந்தான். விவசாய விஷயத்தில் குழந்தைகளுக்குப் பெரியவர்களைவிட அதிகம் தெரியுமென்பது என்னுடைய அநுபவம். ராமு அந்த நெருக்கடியான நிலைமையில் என்ன செய்தான் தெரியுமா? பக்கத்தில் கிடந்த ஒரு தடியை எடுத்துக் கொண்டே எச்சரிக்கைகூடச் செய்யாமல் மாட்டின் முதுகில் நாலு சாத்துச் சாத்தினான். உடனே அந்தக் கோழை மாடு ஓட்டம் பிடித்தது. கேவலம் பெண்கள்கூட இக்காலத்தில் தடியடிகளுக்குப் புறங் கொடுத்து ஓடாமல் தீரத்துடன் நிற்கிறார்கள். அந்த 'ஆண் பசு'வுக்கு அவ்வளவு தைரியங்கூட இல்லை. மனிதர்களில் வீர தீர பராக்கிரம சாலிகளை ஏறு என்றும், காளை என்றும் கவிகள் வர்ணிப்பது அர்த்த மற்றதாகக் காணப்படுகிறது.

* * * *

இன்னும் பத்துத் தினங்கள் கழிந்தன. கத்திரிச் செடிகள் மறுபடியும் தளிர்த்துப் பெரிய பெரிய இலைகள் விட்டுச் செழித்துக் காணப்பட்டன. மாடு, கன்று வராமல் ஒருவர் மாற்றி ஒருவர், 'கண்ணினைக் காக்கின்ற இமையில்' அவைகளைக் காவல் புரிந்து வந்தோம். ஒரு நாள் காலை நான் படுக்கையை விட்டு எழுந்து வெளிவந்ததும் வீதியில் ஓர் அதிசயக் காட்சியைக் கண்டேன். முகக் கட்டைப் பூச்சிலைப்

போன்ற ஒரு வகைச் சிறிய பூச்சிகள் தெரு வீதியில் கால் வைக்க இடமில்லாமல் நிறைந்திருந்தன. ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், லட்சம், கோடி, வெள்ளம், சங்கம், பதுமம், மகாபதுமம் என்னும் கணக்காக அந்தப் பூச்சிகள் கிழக்கிருந்து மேற்கே நெளிந்து நெளிந்து ஆகாய விமான வேகத்தில் அதிவேகமாய்ப் போய்க்கொண்டிருந்தன. இவைகள் எல்லாம் இவ்வளவு அவசரமாய் எங்கே போகின்றன என்பதைப் பார்க்கும்பொருட்டு, காலில் செருப்புப் போட்டுக்கொண்டு கூடியவரையில் பூச்சிகளை மிதியாமல் தத்தித் தத்தி மேற்புறம் சென்றேன். அப்போது என்ன பார்த்தேன் என்று நினைக்கிறீர்கள்? 'நதிகளெல்லாம் சமுத்திரத்தை வந்தடைவது போலவும், சர்வ தேவர்களுக்குச் செய்யும் நமஸ்காரங்களெல்லாம் ஸ்ரீ கேசவனைப் போய்ச் சேருவது போலவும், எல்லாப் புறங்களிலிருந்தும் வந்து கொண்டிருந்த பூச்சிகளெல்லாம் என்னுடைய அருமைக் கத்திரிச் செடியையே குறியாகக்கொண்டு வந்தடைவதைக் கண்டேன். செடிகளில் ஓர் இலையில் ஓர் அணுவளவு பாகங் கூடக் கண்ணுக்குப் புலனாகவில்லை. எல்லாம் பூச்சிகளால் மூடப் பெற்றிருந்தன. மன உணர்ச்சியை வாய்ச் சொற்களால் விவரிக்க முடியாத சிற்சில சந்தர்ப்பங்கள் நேர்வதுண்டு. அத்தகைய தருணங்களில் இதுவும் ஒன்றாகும்.

* * * *

மறுநாட் காலையில் சென்று பார்த்தபோது, கத்திரிச் செடிகளில் ஓர் இலையாவது பாக்கியில்லை. ஆனால், இலைக் காம்புகள் எல்லாம் அப்படி அப்படியே நின்றன. மாட்டைப் போல் காம்புகளையும் தின்றுவிடாமல் விட்டதற்காகப் பூச்சிகளுக்கு நன்றி கூறினேன். ஆனால் பெரிய மாடுமுதல் சிறு பூச்சிகள் வரையில் என்னுடைய விவசாயத்துக்கு ஏன் விரோதம் செய்ய வேண்டுமென்பது எனக்கு விளங்கவேயில்லை. சட்டென்று ஒரு யோசனை தோன்றிற்று. அப்போது விவசாய ராயல் கமிஷன் கல்கத்தாவில் விசாரணை புரிந்துகொண்டிருந்தது. அதன் தலைவர் லின்லித்தோ பிரபுவுக்குப் பின்வருமாறு ஓர் அவசரத் தந்தி

கொடுத்தேன். 'கத்திரிச் செடிகளைப் பூச்சிகள் அரித்துத் தின்றுவிட்டன. நெருக்கடியான நிலைமை. உடனே வந்து பார்வையிடவும்; அல்லது தந்தியில் யோசனை அனுப்பவும்.' ஒன்றரை ரூபாய் தொலைந்ததுதான் மிச்சம்! நாளது வரை பதில் கிடையாது. பிறகு பத்திரிகை படித்ததில் நான் தந்தி கொடுத்த அன்று விவசாயக் கமிஷனுக்குக் கவர்னர் மாளிகையில் நடனவிருந்து நடைபெற்றதாகத் தெரிந்தது. எனவே, பதில் கிடைக்காததைக்குறித்து நான் ஆச்சரிப்படவில்லை.

பின்னும் இருபது நாள் சென்ற பிறகு ஒரு நாள் காலை நான் படுக்கையை விட்டு எழுந்திருக்கலாமா, அல்லது போர்வையை இழுத்துப் போர்த்துக்கொள்ளலாமா என்று யோசனை செய்துகொண் டிருந்தபோது, ராஜம், "மாமா! ஓடி வாருங்களேன்!" என்று கத்தினாள் 'குழந்தைக்கு என்ன ஆபத்தோ தெரியவில்லையே' என்று நான் அலறிப் புடைத்துக்கொண்டு எழுந்து ஓடினேன். "கத்திரிச் செடி பூத்திருக்கு!" என்று அளவிலாத குதூகலத்துடன் கூச்சலிட்டாள் ராஜம். பிடிவாதம், விடா முயற்சி என்கிறார்கள். கத்திரிச் செடியைப்போல் இந்தக் குணங்களுள்ள வேறொரு மனிதனையோ, பிராணியையோ நான் பார்த்ததில்லை; அதிகம் சொல்வானேன்? இருபது செடிகள் நட்டதில் ஒரு செடியானது எவ்வளவோ விபத்துக்களையெல்லாம் தாண்டிக் கடைசியாகப் பூ பூத்து மூன்று காய்களும் காய்த்தது. அவற்றில் ஒன்று சொத்தையாய்ப் போயிற்று. பாக்கி இரண்டையும் செடியிலிருந்து பறித்தோம். அன்றைய தினம் என் மனைவியின் அடுத்த வீட்டுத் தோழி, சமையலுக்கு ஒன்றுமேயில்லை; கறிகாய் ஏதேனும் இருக்கிறதோ?' என்று கேட்கவே, என் மனைவி மிகுந்த பெருமையுடன், 'எங்கள் சொந்தக் கொல்லையில் காய்த்தது' என்பதாக ஒன்றைக் கொடுத்துவிட்டாள். பாக்கி ஒரு காயை மேள தாளங்களுடனே நாலாக நறுக்கி, சாம்பாரில் போட்டோம். சாப்பாட்டின்போது தலைக்கு ஒரு துண்டம் கிடைத்தது. ஆஹா! என்ன இருந்தாலும் சொந்தக் கொல்லையில் பயிரிட்டுக் காய்த்த கறியின் சுவையே வேறுதான்; அந்த ருசி அநுபவித்தவர்களுக்கே தெரியும்.

விவசாயத் துறையில் என்னுடைய சொந்த அநுபவம் இவ்வளவுதான். என்னுடைய தமையனாரின் அநுபவத்தையும் சுருக்கமாகச் சொல்லிவிட்டு இக் கட்டுரையை முடித்து விடுகிறேன். கிராமத்திலுள்ள எங்கள் குடும்ப நிலங்களை அவர்தான் கவனித்து வருகிறார். ஒவ்வொரு வருஷ ஆரம்பத்திலும் அவர் மிக்க உற்சாகமாக விவசாய வேலை தொடங்குவார். 'இந்த வருஷம் குடும்பக் கடன் கட்டாயம் அடைபட்டுவிடும்' என்பார். ஆனால், பிரதி வருஷமும் அவருக்கு ஆசாபங்கம் உண்டாவதற்கான ஏதேனும் ஒரு காரணம் ஏற்பட்டே வருகிறது. சென்ற பத்து வருஷ காலத்தில் அவருடைய அநுபவங்களை எனக்கு எழுதிய கடிதங்களிலிருந்து சுருக்கமாகத் திரட்டி இங்கே கூறுகிறேன்:

1921ஆம் வருஷம் : இந்த வருஷம் ஆனி மாதத்திலேயே தண்ணீர் வந்து சாகுபடி வேலை அதிசீக்கிரம் தொடங்கி, ஆவணி மாதத்திற்குள் நடவெல்லாம் ஆகிவிட்டது. பயிர் நன்றாக வந்துகொண்டிருந்த சமயம் புரட்டாசி மாதத்தில் ஒரு காய்ச்சல் காய்ந்தது. விளைவு ஒன்றுக்குப் பாதிதான்.

1922ஆம் வருஷம் : தண்ணீர்த் தட்டே இந்த வருஷம் கிடையாது. ஆனால், பயிர் செழித்து வளர்ந்து கதிர் வைக்கும் சமயத்தில் எப்படியோ சூறை விழுந்துவிட்டது. இதனால் ஒன்றுக்கு முக்கால்தான் கண்டுமுதல் ஆயிற்று.

1923ஆம் வருஷம் : மார்கழி மாதத்தில் அநியாயப் பனி பெய்து நெல்லெல்லாம் பதராய்ப் போய்விட்டது. மாவுக்கு 15 கலம் புள்ளி பார்த்தது 0 கலம்தான் கண்டது.

1924ஆம் வருஷம் : வெள்ளப் பாழ். ஆவணி மாதத்தில் கொள்ளிடம் உடைப்பு எடுத்துக்கொள்ளவே நட்ட நடவெல்லாம் நாசமாய்ப் போயிற்று. நிலங்கள் எல்லாம் மணலடித்து மேடாய்ப் போகாமல் தப்பிப் பிழைத்தது தம்பிரான் புண்ணியம்.

1925ஆம் வருஷம் : கோடை மழை பெய்து நிலங்கள் இறுகிவிட்டன. ஒன்றுக்குப் பாதி விளைந்தால் பெரிய காரியம்.

1926ஆம் வருஷம் : ஆகா! இந்த வருஷம்போல் எந்த

வருஷமும் விளைந்தது கிடையாது. ஆனல், பொங்கல் பண்டிகை ஆகி, அறுவடை தொடங்கும் சமயத்தில் ஒரு கடு மழை பெய்தது. நெல் வயலில் பாதி, களத்தில் பாதி, வழியில் பாதியாகச் சிதறி நாசமடைந்து போயிற்று.

1927ஆம் வருஷம்: ஆற்றில் தண்ணீர் வருவதற்குக் கால தாமதம் ஆகிவிட்டது. ஆகவே எல்லா வேலையும் தாமதம். விளைவும் அதற்குத் தகுந்தாற்போலத்தான்.

1928ஆம் வருஷம்: இந்த வருஷத்தைப்போல் தண்ணீர்த் தட்டு வேறு எந்த வருஷத்திலும் இல்லை. வயல்கள் அடுத்தடுத்து நனைவதும் காய்வதுமாயிருந்தன. மூன்றில் ஒரு பங்கு தான் விளைச்சல்.

1929ஆம் வருஷம் : எல்லாம் ஒற்றுமையாயிருந்தன. நல்ல உழவு, நல்ல நடவு, நல்ல விளைச்சல். சராசரி மாவுக்குப் பதினைந்துக்குக் குறையாமல் கண்டது. ஆனல், என்ன பயன்? நெல் வாங்குவாரில்லை. 1921ஆம் வருஷத்தில் கலம் ரூபா 4 விற்றது. இப்போது ரூபா 2க்கு யாரும் கேட்கவில்லை. சர்க்கார் வரி கடன் வாங்கிச் செலுத்த வேண்டியதாயிற்று.

1930ஆம் வருஷம்: ஐப்பசி மாதம் பெய்த பெரு மழையினுல இந்தப் பக்கத்தில் பத்துப் பதினைந்து கிராமங்கள் அடியோடு வெள்ளப் பாழ் ஆயின. நமக்கு அவ்வளவு மோசமில்லை. ஆறு மாநிலம் சாகுபடி பாழ்; பாக்கியெல்லாம் பாதகம் இல்லை.' ஆகவே, மற்றவர்களைப்போல் அடியோடு முழுகிப் போகவில்லையென்பதைக் கொண்டு தான் இவ் வருஷம் திருப்தியடைய வேண்டும்.

* * * *

இந்தக் கட்டுரைக்கு நான் கொடுத்த தலைப்பு அவ்வளவு பொருத்தமில்லையென்று இப்போது தோன்றுகிறது. 'நிஷ்காம கர்மம்' என்று கொடுத்திருந்தால் மிக்க பொருத்தமாயிருக்கும்! இந்தப் பூவுலகில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா உபதேசித்த 'நிஷ்காம கர்மயோகத்தை' யாராவது அநுஷ்டிக்கிறார்களென்றால் அவர்கள் இந்தியாவின் விவசாயிகள் தாம். உழைத்துப் பாடுபட வேண்டியது அவர்களுடைய பொறுப்பு. அதனுடைய பலாபலன்கள் ஆண்டவனுடைய பொறுப்பு. வரி வசூல் செய்தல் சர்க்காரின் பொறுப்பு.

# 3. எந்த ஊர், ஸார்?

**சி**ல நாளைக்குமுன் கோர்ட்டில் விசாரணைக்கு வந்த சத்தியாக்கிரஹிகள் சிலர், அவர்களுடைய பெயர், ஊர் முதலிய விவரங்கள் கேட்கப்பட்டபோது, 'வந்தே மாதரம் நம்பர் - I', 'வந்தே மாதரம் நம்பர் - II' என்று பெயர் கொடுத்தார்களென்றும், இதே மாதிரியாக 'ஊர் இந்தியா தேசம்', 'தகப்பனூர் பெயர் மகாத்மா காந்தி' என்பன போன்ற பதில்கள் அளித்தார்களென்றும் பத்திரிகையில் படித்தோம். 'விகட'னின் நயமிகுந்த உயர்தர நகைச் சுவையை அநுபவித்த நண்பர்களுக்கு மேற்கூறிய பதில்கள் கீழ்த்தர ஹாஸ்யமாகவே தோன்றக்கூடும்.

எனினும் பிறருக்குச் சம்பந்தமில்லாத நமது சொந்த விஷயங்களைப்பற்றி அநாவசியமான கேள்விகளுக்குப் பதில் சொல்லிச் சொல்லி என்னைப் போல் அலுத்துப் போனவர்கள் மேற்படித் தொண்டர்களின் மனப்போக்கை ஒருவாறு அறிந்துகொள்வார்கள். அவர்கள் கையாண்ட முறை சரியா, தவரு என்று நான் ஆராய்ச்சி செய்யப் போவதில்லை. ஆனுல் அந்த மாதிரி கேள்விகளுக்கு ஏதேனும் ஒரு பரிகாரம் ஏற்படுத்தவேண்டும் என்பதைமட்டும் வற்புறுத்திக் கூறுவேன்.

கோர்ட்டுக் கேள்விகள் ஒருபுறம் இருக்க, சாதாரண சமூக வாழ்க்கையில் இத்தகைய அநுபவம் நம் நேயர்களில் பலருக்கும் ஏற்பட்டிருக்கக் கூடும். உதாரணமாக, ரெயில் பிரயாணத்தை எடுத்துக்கொள்வோம். முன்பின் தெரியாத ஒருவர் நீர் ஏறிய மூன்ரும் வகுப்பு வண்டியில் உமக்கு எதிர்ப் பலகையில் வந்து உட்காருகிருர். வண்டி கிளம்புகிற வரையில் அவரவர்கள் தத்தம் காரியங்களில் ஈடுபட்டிருக்கிருர்கள். வண்டி கிளம்பிற்ரோ இல்லையோ, வந்தது விபத்து.

"தங்களுக்கு எந்த ஊர், ஸார்?" என்று அந்த எதிரி தமது விநாயகரஸ்திரத்தை எடுத்து விடுகிறார்.

இந்தக் கேள்வி இன்னும் பல வடிவங்களிலும் கிளம்புதல் கூடும். 'ஐயர்வாளுக்கு எந்த ஊரோ?', 'ஏனப்பா உனக்கு இதே ஊர்தானா?', 'ஏன் தங்களுக்கு நேடிவ் பிளேஸ் எது?' அல்லது முழு இங்கிலீஷிலோ, மலையாளத்திலோ, தெலுங்கிலோ அந்தக் கேள்வி கிளம்பும். அது புறப்படாமல் மட்டும் இராது. அந்த முதல் கேள்விக்கு நீர் பதில் சொல்லி விட்டீரானால், எதிரிக்குப் பாதி ஜயம் கிடைத்தது போலத் தான்; மற்றக் கேள்விகளும் வரிசையாகப் புறப்படும்.

"தாங்கள் எந்த ஊர்?"

"விருத்தாசலம்."

"சொந்த ஊரே அதுதானோ?"

"ஆமாம்!"

"அப்படியா? தங்கள் பெயரென்னவோ?"

"பெயர் அண்ணாமலை."

"குலம்? பிள்ளையா? செட்டியாரா?"

"முதலியார்."

"முதலியாரா? ரொம்ப சந்தோஷம். அப்படித்தான் நானும் நினைத்தேன். விவாகம் ஆகிவிட்டதோ?"

"ஆஹா! ஆகிவிட்டது."

"குழந்தைகள் உண்டோ?"

"ஏதோ ஆண்டவன் கொடுத்திருக்கிறான்."

"போகட்டும்; எவ்வளவு குழந்தைகளோ?"

"மூன்று."

"எல்லாம் ஆணோ? பெண்ணுண்டோ?"

"இரண்டு ஆண், ஒரு பெண்."

"பேஷ்! மொத்தம் பிறந்ததே மூன்றுதானுக்கும்?"

"இல்லை; நாலு பிறந்தது; ஒன்று செத்துப் போயிற்று."

"ஐயோ பாவம்! இறந்தது ஆணோ, பெண்ணோ?"

"பெண்."

"பெண் தானே? போகட்டும். தலைச்சனுக்கும்?"

"இல்லை கடைசியில் பிறந்தது."

"ஓகோ அப்படியா? இப்போது மனைவி கர்ப்ப முண்டோ?"

"இல்லை."

"அதேன் அப்படி? கர்ப்பமேயாகவில்லையா? அல்லது . . . ?"

"கர்ப்பம் தரித்து அபார்ஷன் ஆகிவிட்டது!"

"சூச்சூச்சு! நீங்கள் தம்பதிகளாக ஒரு தடவை இராமேசுவரம் போய் வரவேண்டும். இருக்கட்டும், தங்களுக்கு என்ன உத்தியோகம்?"

[நேயர்களே! மன்னியுங்கள். இந்தக் கேள்விகளின் வரிசைக் கிரமம் சில சமயம் மாறி வரலாம். உதாரணமாக, 'என்ன உத்தியோகம்?' என்னும் கேள்வியை அநேகர் மூன்றுவது பாணமாகவே போட்டுவிடுவார்கள். இவ்வளவு நேரம் தாமதிக்கமாட்டார்கள்.]

"யூனியன் பாங்கியில் குமாஸ்தா."

"சம்பளம் என்னவோ?"

கேள்விகளுக்குள் ஜீவாதாரமான கேள்வி இதுவேயாகும். இதற்கு நீங்கள் சொல்லும் பதிலைக்கொண்டுதான் உங்கள் அந்தஸ்தை அவர் மதிப்பிடப் போகிறுர். 'தாங்கள்' அல்லது 'நீர்' அல்லது 'நீ' என்று இனிமேல் அவர் உங்களைக் குறிப்பிடப் போவது இந்தப் பதிலைப் பொறுத்தேயாகும். எனவே, உங்கள் மனச்சாட்சியின் ஆற்றலுக்கு ஏற்ப நீங்களும் பத்தோ, இருபதோ, முப்பதோ, ஐம்பதோ, நூறுே சம்பளம் கூட்டிச் சொல்கிறீர்கள். உள்ளது உள்ளபடியே சொல்லும் பைத்தியக்காரர்களும் சிலர் இருக்கலாம்: இல்லையென்று சொல்லவில்லை.

ஆனுல், அடுத்தாற்போல் 'மேல் வரும்படி உண்டோ?' என்ற கேள்வி வரும்போது என்ன பதில் சொல்வீர்கள்? இந்த நெருக்கடியான நிலைமையில் எப்படிப்பட்ட யோக்கியனுயினும் சிறிது திக்கு முக்காடிப் போக வேண்டியதுதான்.

* * * *

அல்லது 'உத்தியோகமில்லை, விவசாயம்' என்று கூறுகிறீரென வைத்துக்கொள்வோம். அப்போது வேறெருரு கேள்வி வரிசை கிளம்பும்.

"எவ்வளவு காணி நிலம் சேரும்?"

"முப்பது காணி."

"ஓகோ! பரவாயில்லை. எல்லாம் நன்செயா? புன்செய் உண்டா?"

"நன்செய் 20 காணி; புன்செய் 10 காணி."

"பேஷ்! கணக்குச் சரிதான். பெறுமானம் என்ன இருக்குமோ?"

"நன்செய் காணி 2000 ரூபாய் பெறும்."

"நல்ல சொத்துத்தான். 40 ரூபாய்க்குக் குறைவில்லை. கடன் உண்டோ?"

"பத்தாயிரம் ரூபாய் கடன் இருக்கிறது?"

"அடடா! புரோநோட்டா, பந்தகமா?"

"பந்தகந்தான்."

"ஆமாமாம்; இந்தக் காலத்தில் அண்டிமாண்டுக்கு யார் பணம் கொடுக்கிறார்கள்? வட்டி என்னவோ?"

"ஒரு வட்டி."

"பாதகமில்லை; அதை விடாதேயுங்கள். இவ்வளவு குறைந்த வட்டிக்கு நாணயம் கிடைக்காது."

"இந்தச் சொத்துக்குச் சொந்த வீடு அவசியம் இருக்க வேண்டுமே?"

"ஆமாம்; இருக்கிறது."

"மச்சு வீடா? ஓட்டு வில்லை வீடா?"

"ஓட்டு வில்லைதான்."

"கை ஓடா? கள்ளிக்கோட்டை ஓடா?"

"கள்ளிக் கோட்டை ஓடு!"

"அதுதான் சரி; கீழே தள வரிசை உண்டோ?"

"ஆமாம், உண்டு."

"செமன்டா? சுண்ணும்புக்களாயா?" - இதற்குமேல் இந்தக் கேள்வி பதிலை வளர்த்தினேனுயின், நேயர்கள் தடியை எடுத்துக்கொண்டு என்னை அடிக்க வருவார்களென்பதில் சந்தேகமில்லை. ஆனல், நான் அவர்கள் கையில் சிக்க மாட்டேனுதலால், அடுத்தாற்போல் இந்த மாதிரி கேள்வி கேட்பவர்கள் எதிர்ப்படும்போது தங்கள் கோபத்தை அவர்

கள்மீது செலுத்துவார்கள். இம்மாதிரி அஹிம்சா தர்மத்துக்கு மாறுபாடு உண்டாவதை நான் விரும்பவில்லையாதலின் இத்துடன் விடுகிறேன். நிற்க.

* * * *

'சம்பளம் என்ன?' என்னும் கேள்வி சம்பந்தமாகப் பல முறை நான் சங்கடத்தில் மாட்டிக்கொண் டிருக்கிறேன். அவற்றில் இரண்டு அநுபவங்களை உங்களுக்குக் கூறியே ஆக வேண்டும். 192/ஆம் வருஷத்தில் நான் கலாசாலையை பகிஷ்கரித்துவிட்டு, காங்கிரஸ் பிரசாரம் செய்துகொண் டிருந்தேன். அப்போது ஒருநாள் நான் ரெயில் பிரயாணம் செய்ய நேரிட்டது. ரெயிலில் எதிர்ப் பீடத்தில் உட்கார்ந் திருந்த கிராமவாசி ஒருவர் வழக்கமான விசாரணைக்குப் பின்னர், "என்ன உத்தியோகம்?" என்றார்.

''காங்கிரஸ் வேலை'' என்றேன்.

''காங்கிரஸா? அப்படி ஒரு கம்பெனி இருக்கிறதா? என்ன சம்பளம்?'' என்று கேட்டார்.

''சம்பளம் கிடையாது'' என்றேன்.

''அது என்ன ஐயா, சம்பளம் இல்லாத உத்தியோகம்? ஓஹோ! கமிஷன் உண்டோ?''

"கமிஷனும் இல்லை'' என்றேன்.

"என்னடா அப்பா, அதிசயமாயிருக்கிறது? சம்பளம் கமிஷன் ஒன்றுமில்லாமல் எதற்காக உத்தியோகம் பார்க்கிறது?''

''இல்லை, ஐயா! காங்கிரஸ் என்றால் தேச நன்மைக்காகப் பாடுபடும் ஒரு சபை. அந்தச் சபையின்கீழ்ப் பொது ஜன நன்மைக்காகச் சம்பளமில்லாமல் ஊர் ஊராய்ச் சென்று பிரசாரம் செய்கிறோம்!''

அந்த மனிதர் கொல்லென்று ஒரு சிரிப்புச் சிரித்தார். அவநம்பிக்கை ததும்பிய அந்தச் சிரிப்பின் முன்னால், நான் எவ்வளவோ விவரமாக எடுத்துச் சொன்னதெல்லாம் வியர்த்தமாயிற்று. ஆனால், அந்தக் காலம் இப்போது மாறிவிட்டதென்றே நம்புகிறேன். உப்புச் சத்தியாக்கிரஹத்

துக்குப் பிறகு காங்கிரஸைப்பற்றி இப்படிக் கேள்வி கேட்ப வர்கள் அநேகமாக இருக்கமாட்டார்கள்.

* * * *

பிற்பாடு நான் தமிழ்ப் பத்திரிகை யொன்றில் உதவியாசிரியனுயிருந்த காலத்தில், ஒரு கிழவருடன் சம்பாஷிக்க நேர்ந்தது. கிழவருடைய புதல்வன் ரெயில்வே ஸ்டேஷனில் கூட்ஸ் கிளார்க் என்பது எனக்குத் தெரியும். எனவே, அவர்; ''சம்பளம் என்ன?'' என்ற கேள்விக்கு வந்த போது, என் உண்மை வள்ளலே அவரிடம் கூசாமல் கூறலாம் என்று நினைத்துச் சிறிது இறுமாப்புடனேயே, ''சம்பளம் 60 ரூபாய்'' என்றேன். இதனுல் என்மீது அவருக்குள்ள மதிப்பு சிறிது உயரும் என்றே எதிர்பார்த்தேன்.

ஆனுல் அந்தப் பொல்லாத கிழவர், அத்தகைய மதிப் பைச் சிறிதும் தெரிவியாமல் 'மேல் வரும்படி ஏதாவது உண்டோ?' என்று கேட்டார். ஈன ஸ்வரத்தில், ''இல்லே'' என்று நான் சொன்னதும், ''இவ்வளவுதானு? நம்ம பையனுக்குக் கூட்ஸ் கிளர்க் உத்தியோகம். சம்பளம் 30 ரூபாய்தான். ஆனுல் மேல் வரும்படி 50 ரூபாய்க்குமேல் வரும் என்று பெருமை ததும்ப உரைத்தார்.

எனவே, நான் அக்கிழவர் முன்னுல் தோல்வியை ஒப்புக் கொள்ளும்படியாயிற்று.

* * * *

இவ்வாறு நான் பலமுறை எதிரிகளின் கையில் தோல்வி யடைந்திருக்கிறேனுயினும், ஒரே ஒரு தடவைமட்டும் ஒரு நபரை முற்றும் முறியடித்து ஓட்டியிருக்கிறேன். அது சமீபத்தில் நடந்த சம்பவம். என் நண்பர் ஒருவர் சத்தியாக்கிரஹ இயக்கத்தில் ஈடுபட்டுச் சிறை செல்ல விருந் தார். அவரை அனுப்பி வருவதற்காக அவருடைய வழக்கு விசாரணைக்குப் போயிருந்தேன். விசாரணைக்குப் போனதில் என்னுடைய முக்கிய நோக்கம், அந்த நண்பருடைய பௌண்டன் பேனுவும், கைக் கடிகாரமுமாகும். அவற்றின் மேல் எனக்கு வெகுநாளாகக் கண் இருந்தது. 'இதுதான்

சமயம்' என்று தீர்மானித்து, நண்பர் தண்டனையாகி வெளியே வந்ததும் ''ஏனப்பா, பௌண்டன் பென்னையும் ரிஸ்ட் வாச்சையும் என்ன செய்யப் போகிறாய்? என்னிடத்தில் கொடுத்து வையேன்; பத்திரமாய் வைத்து வைக்கிறேன்'' என்றேன். ''அட பாவி! முன்னாலேயே கேட்டிருக்கக்கூடாதா? ஸம்மன் வந்தவுடனேயே தாண்டவராயன் வாங்கிக்கொண்டு விட்டானே?'' என்று பதில் வந்ததும், எனக்கு எப்படியிருந்திருக்குமென்று நீங்களே சொல்லுங்கள். 'தரித்திரப் பயல்! பிறர் சொத்துக்கு இவ்வளவு ஆசையா? தண்டனையாவதற்குள் அவசரமா?' என்று தாண்டவராயனை மனத்திற்குள் திட்டினேன்.

என்னுடைய முகங்களைப் பார்த்துத்தானோ என்னவோ நண்பர் என் முதுகில் தட்டிக் கொடுத்து, ''கவலைப்படாதே! அவற்றிற்குப் பதில் வேறு இரண்டு சாமான் உனக்குத் தருகிறேன்'' என்று கூறி, தாம் அணிந்திருந்த காந்தி குல்லாயையும், 'ஹாவர்ஸாக்' என்னும் (தோளில் மாட்டிக் கொள்ளும்) கதர்ப் பையையும் கொடுத்தார். அதுவரையில் குல்லா போடும் வழக்கமே என்னிடம் கிடையாது. மகாத்மாவிடம் எனக்குள்ள பக்தியை மற்ற வழிகளில் காட்டினால் போதும் என்று எண்ணியிருந்தேன். பைக்கும் தேவை இருந்ததில்லை. ஆனாலும் 'அகப்பட்டதைச் சுற்றடா ஆண்டியப்பா!' என்று தோண்டியப்பனின் உபதேசத்தை அநுசரித்து, குல்லாவைத் தலையிலணிந்து, பையையும் தோளில் மாட்டிக்கொண்டு ரெயிலுக்குக் கிளம்பினேன்.

* * * *

ரெயிலேறியது திருச்சிராப்பள்ளி ஜங்ஷனில் என்னுடைய குல்லாவும் பையும் ஸ்டேஷனில் அநேகருடைய கவனத்தைக் கவர்வதைக் கண்டேன். முக்கியமாக, என்னைச் சுட்டிக்காட்டி ஏதோ பேசிக்கொண்டிருந்த இரண்டு மனிதர்கள்மீது என் பார்வை விழுந்தது. அவர்களில் ஒருவர் சிறிது மூக்கு நீண்டவர், ரெயில் புறப்படும் சமயத்தில் சட்டென்று தாவிப் பக்கத்து வண்டியில் ஏறியதையும் கடைக்கண்ணால் பார்த்தேன்.

எனவே, வண்டி திருவரம்பூர் ஸ்டேஷனில் நின்றதும் அந்த மனிதர் இறங்கி வந்து என் வண்டியில் ஏறி எதிர் ஆசனத்தில் உட்கார்ந்தபோது நான் சிறிதும் ஆச்சரிய மடையவில்லை. அதற்கு மாருக அவர் வருகையை எதிர் பார்த்துப் பூரண ஆயத்தமாயிருந்தேன். இரண்டொரு முறை தொண்டையைக் கனைத்துச் சரிபடுத்திக்கொண்டு அந்த மூக்கு நீண்ட மனிதர் மெதுவாக ஆரம்பித்தார். "தங்களை எங்கேயோ பார்த்த ஞாபகமிருக்கிறது, ஸார்! எங்கே யென்றுமட்டும் ஞாபகம் வரவில்லை'' என்ருர்.

"எனக்கும் அப்படித்தான் ஸார், தோன்றுகிறது. அது தான் யோசித்துக்கொண் டிருந்தேன். ஒரு வேளை கும்ப கோண மகாமகத்தில் . . . .''

''பார்த்தீர்களா! நினைத்தேன்! மகாமகத்துக்கும் நீங்கள் வந்திருந்தீர்களல்லவா?''

''நாஞ? நான் கும்பகோணத்துக்குப் போனதே கிடை யாது.'' ஆசாமி கொஞ்சம் திடுக்கிட்டுப்போஞர். "பின்னே மகாமகத்தில் பார்த்ததாகச் சொன்னீர்களே!'' என்ருர்.

''இதோ பாருங்கள்! நான் சொல்லாததைச் சொன்ன தாகக் கூறிஞல் என்ன செய்யட்டும்! ஒருவேளை மகாமகத் தில் என்றுதானே நான் சொன்னது?''

''எனக்கு விளங்கவில்லை; நீங்கள் மகாமகத்துக்கே வர வில்லையாஞல் நான் எப்படி உங்களை அங்கே 'ஒருவேளை' பார்த்திருக்க முடியும்?''

''நான் வராவிட்டால் என்ன? நீங்கள் போயிருக்கலா மல்லவா?''

''நான் போயிருந்தால். . . . ?''

''ஒருவேளை அங்கே என் தம்பியைப் பார்த்திருக் கலாம்!''

''ஓஹோ! தெரிந்தது, தெரிந்தது! இதை முன்னமேயே சொல்லியிருக்கலாமே?''

"மறுபடியும் பார்த்தீர்களா? சொல்வதற்கு நீங்கள் இடம் கொடுத்தால்தானே . . . . ?''

''அதுபோகட்டும், ஸார்! தங்களுக்கு எந்த ஊர் சொல்லுங்கள்.''

"சொந்த ஊர் மாயவரம் . . . ."

"ஓஹோ ஹோ! ரொம்ப அழகாகப் போச்சு! எனக்குப் பக்கத்திலே சீயாழிதான். அப்படிச் சொல்லுங்கள், ஐயா! மாயவரத்தில் எந்தத் தெருவோ?"

"பெரிய கடைத் தெரு" (அப்படி ஒரு தெரு எந்த ஊரிலும் இருந்தே தீர வேண்டுமல்லவா?)

"சரிதான், சரிதான்! பெரிய கடைத் தெரு வக்கீல் சோமசுந்தரச் செட்டியார் தங்கை மகளைத்தான் என்னுடைய மாமன் மகனுக்குக் கொடுத்திருக்கிறது. செட்டியாரை உங்களுக்குத் தெரியுமல்லவா?"

"ஆ! அவருடைய தகப்பனாரைக்கூடத் தெரியும்."

"யார் சொக்கலிங்கச் செட்டியாரையா? அதெப்படி ஸார்! அவர் செத்துப் போய் . . . இருக்கட்டும், தங்களுக்கு வயது என்ன ஆகிறது. . . ?"

"அடுத்த மார்கழிக்குப் பத்தொன்பது!"

"பத்தொன்பதா, இருபத்தொன்பதா?"

"பத்தொன்பது."

"என்ன வேடிக்கை, ஐயா! தங்களுக்குக் குறைந்தது முப்பது வயதிருக்கலாமென்று யாரும் சொல்வார்களே!"

"வழியில் போகிறவர்கள் எது வேண்டுமானாலும் சொல்வார்கள். அதற்கு நான் என்ன செய்யட்டும்?"

"தாங்கள் எந்த வருஷம் பிறந்தீர்கள்?"

"1805ஆம் வருஷம்!"

"என்ன, என்ன, அப்படியானால் தங்களுக்கு இப்போது 125 வயதல்லவா ஆக வேண்டும்? 125இல் 19 போனால் 106 வருஷம் வித்தியாசப்படுகிறதே!"

உடனே அந்த மூக்கு நீண்டவரின் கையைப் பிடித்து ஒரு குலுக்குக் குலுக்கினேன். "சபாஷ்! உங்களுக்கு நல்ல மூளை, ஸார். ரொம்ப நாளாக வித்தியாசத்தைக் கண்டு பிடிக்க முயற்சி செய்து வருகிறேன். நீங்கள் ஒரே நிமிஷத்தில் கண்டுபிடித்துவிட்டீர்களே!" என்றேன்.

ஆசாமி ஒரு நிமிஷம் என்னை ஏற இறங்கப் பார்த்தார். "ஆமாம், ஸார்! இதற்கென்ன வழி? முதலில் உங்களுக்குப்

பத்தொன்பது வயது என்றீர்கள்! அப்புறம் 125 என்கிறீர்கள். . . .''

''பார்த்தீரா! பார்த்தீரா! நீர் என்ன, பத்திரிகை நிருபரோ! நான் சொல்லாததையெல்லாம் சொன்னதாகச் சொல்கிறீரே? எனக்கு 125 வயது என்று நான் சொன்னேனு?''

மறுபடியும் சற்று நேரம் யோசித்தார். உடனே அவர் முகம் பிரகாசம் அடைந்தது. ''அட இழவே! சாலிவாகன சகாப்தத்தில் வருஷம் சொல்கிறீராக்கும்! முன்னமே சொல்லித் தொலைத்திருக்கக் கூடாதா? இருக்கட்டும்; உமக்கு 19 வயதுதான் என்று சொல்கிறீர்?''

''அதுதான் என் அபிப்பிராயம். இதைப் பத்திரிகையில் வெளியிடுவதற்கும் உமக்கு அதிகாரம் கொடுக்கிறேன்!''

''அப்படி யென்றால் நீர் சொக்கலிங்க செட்டியாரைப் பார்த்திருக்க முடியாதே!''

''என் விஷயமாக என்னைவிட உமக்கு அதிகம் தெரிகிறது. பிறகு என்னை ஏன் கேட்கிறீர்?''

''இல்லை, ஸார்! கோபித்துக்கொள்ளாதேயுங்க. செட்டியாரை எப்படி உங்களுக்குப் பரிச்சயம்?''

''ஆ! அப்படி வாருங்கள் வழிக்கு! செட்டியாருடைய கருமாதிக்கு நான் போயிருந்தேன். புரோகிதர் 'சுக்லாம் பரதரம்' ஆரம்பித்தபோது அடக்கமுடியாத தும்மல் வந்து தும்மினேன். அதற்காக 'என்னடா, அபசகுனம்?' என்று செட்டியார் கோபித்துக்கொண்டார்.

''இது என்ன ஓய்! முழு மோசமாய் இருக்கிறது? செட்டியாருக்குக் கருமாதி என்றால் அவர் செத்துப் போயிருக்க வேண்டுமே; நீர் தும்மினால் அவருக்கு என்ன கவலை?''

''அதுதான் ஸார், இத்தனை நாளாய் எனக்கும் புரியவில்லை. உங்களுக்குத்தான் தெரியுமே? செட்டியார் எப்போதும் ஒரு மாதிரி மனிதர்!''

"இருக்கட்டும், ஐயா! செட்டியார் செத்துப் போனார் என்று சொன்னீர்?—"

"அப்படி நான் சொன்னேனா?"

"அட இழவே! அப்படியானால் அவர் சாகவில்லையா?"

"அதில் அபிப்பிராய பேதம் இருந்தது. சிலர் செத்துப் போனதாகச் சொன்னார்கள்; சிலர் சாகவில்லையென்றார்கள்."

"நீர் என்ன நினைத்தீர்?"

"நான் ஒன்றும் நினைக்கவில்லை. நான் ஏன் நினைக்க வேண்டும்? எனக்கா கருமாதி!"

*   *   *   *

வேறு மனிதனாயிருந்தால் இதற்குள் தோல்வியை ஒப்புக்கொண்டிருப்பான். ஆனால் அந்த மூக்கு நீள மனிதர் இலேசுப்பட்டவரல்ல; எனவே, கொஞ்ச நேரங் கழித்து மறுபடியும், "தங்களுக்கு அண்ணன் தம்பிகள் யாரேனும் உண்டா?" என்று கேட்டார்.

"உண்டு என்றுதான் நினைக்கிறேன். ஆனால் நிச்சயமாய்ச் சொல்வதற்கில்லை. உண்மை என்னவென்றால், நன்றாக ஞாபகமில்லை" என்றேன்.

"இதைப்போன்ற அதிசயத்தை நான் கேட்டதேயில்லை" என்றார் மூக்கர்.

"ஓஹோ! எந்த விதத்தில் இது அதிசயமாகத் தோன்றுகிறது?" என்றேன்.

"சற்று முன்னால் உங்களுக்கு ஒரு தம்பி உண்டென்றும், அவன் மகாமகத்துக்குப் போயிருந்ததாகவும் சொன்னீர்களே!"

"ஆமாம், ஸார்! ஆமாம். நல்ல வேளை ஞாபகப்படுத்தினீர்கள். மிக்க வந்தனம். ஒரு தம்பி இருந்தான். அவன் பெயர் இன்னாச்சிமுத்து. அந்தப் பெயரைச் சொன்னாலே எனக்குத் துக்கம் நெஞ்சை அடைத்துக்கொண்டு போகும். அதனால்தான் மறந்துவிட்டேன்."

"ஐயோ பாவம்! செத்துப் போனானாக்கும்!"

''அதுதானே ஸார், நிச்சயம் தெரியவில்லை! ஏன் கேட்கிறீர்கள்? பெரிய மர்மமாக அல்லவா நேர்ந்து போயிற்று?''

"மர்மம் என்ன? ஆளே அகப்படவில்லையோ?''

"அப்படித்தான் சொல்லவேண்டும். சுடுகாட்டில் புதைத்துவிட்டு வந்தோம். அப்புறம் . . . . . . !''

''இதென்ன கூத்து? செத்துப் போனது நிச்சயம் தெரியாமலே புதைத்துவிட்டீர்களா?''

''சீச்சீ! அப்படியல்ல. செத்துப் போனது சர்வ நிச்சயம். உம்மைப்போல் இப்படி யாராவது கேட்கப் போகிறார்களென்றெண்ணித்தான் டாக்டர் சர்டிபிகேட்டை வாங்கி வைத்திருக்கிறோம்.''

''செத்துப் போனது நிச்சயம். புதைத்தது நிச்சயம். பின்னர் இதில் மர்மம் என்ன?''

''ஆ! அதுதான் விஷயம்; செத்துப் போனதும் புதைத்ததும் நிச்சயந்தான். ஆனால், யார் செத்துப் போனது, யாரைப் புதைத்தது என்பதுதான் மர்மம். நன்றாகக் கவனித்துக் கேளுங்கள். நானும் இன்னாச்சிமுத்துவும் இரட்டைப் பிள்ளைகள். நாங்கள் மூன்று வயதுக் குழந்தைகளாயிருந்தபோது சேர்ந்தாற்போல் குளத்தில் விழுந்து விட்டோம். இரண்டு குழந்தையில் ஒன்று செத்துப் போயிற்று. செத்துப் போனது யார் என்று நிச்சயமாக இதுவரை கண்டு பிடிக்கவில்லை. சிலர் இன்னாச்சி என்றார்கள்; சிலர் நான் என்கிறார்கள்.''

''தங்கள் பெயர் என்ன?''

''பார்த்தீரா? நீர் புத்திசாலியென்றல்லவா நினைத்தேன்? செத்துப் போனது இன்னாரென்று தெரியாதபோது என் பெயர் இதுவென்று நான் எப்படிச் சொல்வது? இருந்தாலும் இந்த மர்மத்தைக் கண்டுபிடிக்க ஒரு துப்பு எனக்கு அகப்பட்டது. இதுவரை ஒரு பிராணியிடமும் அதை நான் வெளியிட்டதில்லை உம்மிடந்தான் முதன் முதலாகச் சொல்கிறேன்: இரட்டைக் குழந்தைகளில் ஒன்றின் இடது தோளில் பெரிய மச்சம் ஒன்றிருந்தது. அந்தக் குழந்தை தான் முழுகி இறந்து போயிற்று.''

"அப்படியானால் அதில் மர்மம் ஒன்றுமில்லையே?"

"முழுவதும் சொல்வதற்குள் அவசரப்படுகிறீரே! அந்தப் பெரிய மச்சம் என்னுடைய இடது தோளில் இருக்கிறது; இப்போது என்ன சொல்கிறீர்?"

"ஒன்று நீர் பைத்தியமா யிருக்கவேண்டும்; அல்லது நான் பைத்தியமா யிருக்கவேண்டும்."

"நான் பைத்தியமில்லை. உம்மைப்பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், மேற்படி சம்பவத்தில் எல்லாவற்றிலும் அதிசயமான விஷயத்தை நீர் கேட்கவில்லையே? இன்னாசியைப் புதைப்பதற்கு எல்லா ஏற்பாடும் தயாராயிருந்தபோது அங்கே வசித்த ஒரு மயில் தன் இனிய குரலை எடுத்துக் கூவிற்று. உடனே இன்னாசி சட்டென்று எழுந்து, இரண்டு இறகு கேட்டு வாங்கிக்கொண்டு வருகிறேன் என்பதாக அந்த மயிலைத் துரத்திக்கொண்டு ஓட்டம் பிடித்தான். எல்லோரும் ஏமாந்து போனோம்."

* * * *

இதற்குள் தஞ்சாவூர் ஸ்டேஷன் வந்தது. அந்த நன்றி கெட்ட சி. ஐ. டி.காரன் ஒரு 'குட் மார்னிங்' கூடச் சொல்லாமல் எழுந்து போனான். அன்றைய தினம் அவன் என்ன 'டைரி' எழுதினான் என்று பார்க்க எனக்கு எவ்வளவோ ஆவல் உண்டு. ஆனால், இந்த ஜன்மத்தில் அது கைகூடாது என்றே நினைக்கிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

# 4. பேச்சின்பம்

பாட்டின்பம், கவியின்பம், காட்சியின்பம், சுவை யின்பம் முதலியவைகளைப்பற்றி எல்லோரும் அறிந்திருக் கிறோம். ஆனால், இதென்ன பேச்சின்பம்? புதிதாயிருக் கிறதே? ஆமாம், பெயர் புதிதுதான்; விஷயம் என்னவோ மிகப் பழசு. மேற்கண்ட இன்பங்கள் எல்லாவற்றையும் பூரணமாய் அநுபவிப்பதற்கு இன்றியமையாத சாதனமா யிருப்பது பேச்சின்பமாகும்.

"பேச்சிலே என்ன இருக்கிறது? செயல், செயல் வேண்டும்" என்று சில பெரியோர் சொல்வார்கள். இதை அவர்கள் உண்மையாக உணர்ந்திருந்தால் இப்படிச் சொல்லியே யிருக்கமாட்டார்கள் அல்லவா? உண்மையில், செயலைவிடப் பேச்சிலேயே இன்பம் அதிகம் என்பதற்கு அவர்களுடைய மேற்படி பேச்சே போதிய அத்தாட்சி யாகும்!

பெரிய விஷயம் எதற்கும் போக வேண்டாம். கேவலம் சர்க்கரைப் பொங்கல் அல்லது உளுந்து வடையை எடுத்துக் கொள்வோம். இவைகளைப்பற்றிப் பேசும்போது எவ்வளவு ருசியாயிருக்கிறது? சீரகச் சம்பா அரிசியைப் பாலில் வேக வைத்து, அதில் பதமாகக் காய்ச்சிய வெல்லப் பாகை விட்டு, குங்குமப் பூவையும் போட்டுக் கிளறினால், அடடா! நாவில் ஜலம் சொட்டுகிறது. உளுந்தை வழுமூனாக அரைத்து, இஞ்சியும் பச்சை மிளகாயும் வெங்காயமும் பொடிப் பொடியாக நறுக்கிப்போட்டு, வெண்ணெய் காய்ச்சின நெய்யில் கையகலம் வடை தட்டினால் கேட்பானேன்? பன்னிரண்டு வடையை முறித்துத் தள்ளி விடலாமென்று தோன்றுகிறது.

உண்மையாகவே, சர்க்கரைப் பொங்கலும், வடையும் செய்து வைத்துக்கொண்டு சாப்பிடத் தொடங்குங்கள்.

வாய்ப் பொங்கலிலும். பேச்சு வடையிலும் இருந்த ருசியில்லை என்பதைக் காண்பீர்கள். சர்க்கரைப் பொங்கலில் குட்டிச் சாமி ஒன்றிருந்து ஒரு பல்லை இலேசாக மூளி செய்துவிடுகிறது. வடையில் ஒளிந்திருந்த கடிபட்ட பச்சை மிளகாய்த் துண்டு, மனிதனையும் படைத்து மிளகாயையும் கூடப் படைத்த முட்டாள் பிரம்மனுக்குத் திட்டு வாங்கி வைக்கிறது!

அன்றியும், வாய்ப் பொங்கல் கிளறும்போதும், வாய் வடை தட்டும்போதும் எவ்வித இடையூறும் எதிர்ப்படுவதில்லை. அரிசியைப் பாலில் வேக வைப்பதற்கோ வெண்ணெய் காய்ச்சின நெய்யில் வடை தட்டுவதற்கோ ஆட்சேபம் எதுவும் தோன்றுவதில்லை. ஆனால், உண்மையில் அவைகளைச் செய்யத் தொடங்கும்போது, பால்காரர்களின் அநியாயம், வெண்ணெய் காய்ச்சின நெய்யின் அருமை, பாங்கிக் கணக்கின் நிலைமை, மகசூல் கம்மி, வரிகளின் உயர்வு, சர்க்கார் சிக்கனம், சம்பளப் பிடித்தம், அஜீரணத்தின் உபத்திரவம், டாக்டர்களின் தொல்லை, கீதையின் உபதேசம், இயற்கையுணவின் மேன்மை முதலிய இவ்வளவு தடைகளும் வந்து குறுக்கிடுகின்றன. பேச்சுக்கும் செயலுக்குமுள்ள வேற்றுமையைப் பாருங்கள்.

பேச்சின் பெருமையை இன்னும் நன்கு அறிய வேண்டுமானால் குழந்தைகளிடம் போக வேண்டும். குழந்தையின் மழலைச் சொல்லில் தாயார் இன்புறுவதை நான் இங்கே குறிப்பிடவில்லை. அதைப் 'பேச்சின்பம்' என்று சொல்லக் கூடாது. 'குழறலின்பம்' அல்லது 'உளறலின்பம்' என்று வேண்டுமானால் சொல்லலாம். சிறு பிள்ளைகளுக்குள் ஒருவருக்கொருவர் மனஸ்தாபம் வந்தால், அவர்கள் கொடுக்கும் பெரிய தண்டனை என்ன? 'உன்னோடு பேசுவதில்லை, போ' என்பதுதான். சிநேகத்துக்கு அடிப்படை பேச்சு. பேச்சு இல்லாவிட்டால் சிநேகமில்லை.

* * * *

**மௌனத்தின்** பெருமையைப்பற்றிப் பெரியோர் பலர் சொல்லியிருக்கிறார்கள். 'மௌனம் கலகம் நாஸ்தி'

என்பது ஒரு முதுமொழி. உலகத்திலே கலகம் இல்லா திருப்பது ஒன்றுதான் முக்கியமான காரியம் என்ருல், நாம் எல்லோரும் ஊமைகளாகிவிடலாம். இம்மாதிரியே, கலகம் உண்டாவதெல்லாம் ஸ்திரீகளிஞல்தான் என்றும் சொல்லப் படுவதுண்டு. 'சீதை இல்லாவிட்டால் இராமாயணம் இல்லை; துரோபதி இல்லாவிட்டால் பாரதமில்லை; ஹெலன் இல்லாவிட்டால் டிராய் யுத்தம் இல்லை. ஆதலின் பெண் கள் இல்லாவிட்டால் கலகம் கிடையாது' என்று சொல் வார்கள். இதற்காக உலகில் பெண்களே வேண்டியதில்லை யென்று தீர்மானித்து விடலாமா? இதில் ஒரு சங்கடந்தான் இருக்கிறது. பெண்கள் இல்லாவிட்டால் கலகம் இல்லாம லிருக்கலாம்; ஆனுல், அதோடு உலகமும் இல்லாமல் போய் விடும்; அவ்வாறே பேச்சில்லாவிடில் கலகமில்லாமலிருக்க லாம்; அத்துடன் சிநேகமும் இல்லாமல் போய்விடும்.

மௌனத்திற்கு ஒரே ஓா உபயோகந்தான் உண் டென்று எனக்குத் தோன்றுகிறது. ஏகாதசி உபவாசத் திற்குப் பிறகு துவாதசி பாரணை ருசிப்பதைப் போல், ஒரு நாள் மௌனமாயிருந்தால் மறு நாள் பேச்சின் சுவை அதிக மாகக் கூடும். மகான் தாயுமானவர் மௌனத்தின் சிறப்பைக் குறித்து எல்லையில்லாமல் பாடியிருக்கிருர். அவரும், பட்டினத்தடிகளும் தற்செயலாகச் சந்தித்தார்க ளென்று ஒரு நிமிஷம் கற்பனை செய்துகொள்வோம். அவர் களுக்குள் பின்வருமாறு சம்பாஷணை நடக்கலாமென்று தோன்றுகிறது:

தாயு: பட்டினத்தாரே! மௌனத்தின் சுகத்தைப் பார்த்தீர்களா? என்ன ஆனந்தம்! என்ன அற்புதம்!

பட்டி: தாயுமானுரே! சும்மா இருப்பதே சுகமென்று சொன்ன உம் வாயில் சர்க்கரையை அள்ளிக் கொட்ட வேண்டும். மௌன இன்பத்தின் முன்னுல் மற்ற இன்பங்க ளெல்லாம் துச்சம்! துச்சம்! துச்சம்!

ஒரு முகூர்த்த காலம் பேசினுலும் இவர்களால் மௌன இன்பத்தைப்பற்றி முழுதும் பேசி முடிக்க முடியாது.

'இனிது இனிது ஏகாந்தமினிது' என்று தமிழ்

மூதாட்டி கூறினள்; ஆயினும் இந்த விஷயத்தை எடுத்துச் சொல்வதற்காக அந்தப் பாட்டி ஊர் ஊராய் மக்கள் இருப்பிடம் தேடிச் சென்றதாக அறிகிறோம்.

*   *   *

சுமார் இரண்டு வருஷங்களுக்கு முன்பு ஒரு முறை பத்து ரூபாய் செலவில் ஐந்து நிமிஷம் தேவ பதவி பெறும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. 'கராச்சி காங்கிரஸுக்குப் போனேன்; அங்கே ஆகாய விமானம் ஏறினேன்' என்று எப்பொழுதுமே சொல்லிக்கொண்டிருக்கலாமே என்பதை உத்தேசித்து மேற்படி காரியத்திற்குத் துணிந்தேன். 'மோனே பிளேன்' எனப்படும் அச் சிறு விமானத்தில் விமான ஓட்டியைத் தவிர ஒருவர்தான் உட்காரலாம். முன்னும் பின்னுமாக அதில் இரண்டு சிறு குழிகள் இருந்தன. முன் குழியில் நானும், பின் குழியில் விமான ஓட்டியும் உட்கார்ந்தோம். நடுவில் மறைப்பு இருந்தபடியால் உட்கார்ந்தபடி திரும்பிப் பார்த்தால் அவன் முகம் எனக்குத் தெரியாது.

விமானம் பூமியிலிருந்து கிளம்பித் தாவித் தாவி ஆகாயத்தில் எழும்பலாயிற்று. ஒவ்வொரு தடவை அது தாவிய போதும் ஒரு முறை செத்துப் பிழைத்ததாக நினைத்தேன். ஆனால், சுமார் 300 கஜ உயரம் கிளம்பிய பிறகு விமானம் நேராகப் பறக்கத் தொடங்கியதும், ஆகா! இந்த ஆனந்தத்தைச் சொல்லி அநுபவிக்கப் பக்கத்தில் ஒருவருமில்லையே யென்ற துக்கம் உண்டாயிற்று.

கடற்கரை மைதானத்திலிருந்து கிளம்பிய ஆகாய விமானம் சுமார் ஐந்து மைல் தூரம் பறந்து காங்கிரஸ் நகருக்கு மேலாக வந்தது. அந்த அற்புதக் காட்சியை நான் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தபோது, தலை மீது பட் என்று ஓர் அடி விழுந்தது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். ஒரு கைமட்டும் தெரிந்தது. அது விமான ஓட்டியின் கையென்று சுலபமாகத் தெரிந்துகொண்டேன். அந்தக் கை கீழே சுட்டுக் காட்டியதிலிருந்து, காங்கிரஸ் நகரைப் பார்க்கும்படி அவன் எனக்குச் சொல்கிறான் என்று

அறிந்தேன். அந்தச் சந்தர்ப்பத்தில் நீங்களாயிருந்தால் என்ன செய்திருப்பீர்கள்? 'இவன் என்ன காங்கிரஸ் நகரைப் பார்க்கும்படி நமக்குச் சொல்வது? அப்படிச் சொல்வதாயிருந்தாலும், அதற்காகத் தலையில் அடிக்கவா வது? சுத்த போக்கிரித்தனம்! இந்தப் பயலுடைய விமானத்தில் இனி அரைக் கணங்கூட இருப்பதில்லை!' என்று தீர்மானித்து ஆயிரம் அடி உயரத்திலிருந்து நேராகக் கீழே குதித்திருப்பீர்களோ, என்னவோ? இத்தகைய சுயமரியாதை உணர்ச்சி அப்போது எனக்கொன்றும் ஏற்படவில்லை. ஆஹா! கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் பேசுவதற்கு ஓர் ஆள் இருக்கிருனே என்ற உவகைதான் பொங்கிற்று. 'தேக்கா! தேக்கா! கூப் தேக்கா!' என்று விமான எஞ்சின் சத்தத்தையும் மிஞ்சிய குரலில் கத்தினேன். இரண்டொரு ஹிந்தி வார்த்தைகள் தெரிந்திருந்தது எவ்வளவு சமயத்தில் கை கொடுத்தது பாருங்கள்! அந்தச் சமயத்தில் அந்த வார்த்தைகளைமட்டும் நான் பேசியிராவிட்டால் என்னுடைய விமானப் பிரயாணம் இன்பகரமானதாகவே தோன்றியிராது.

'வெறும் பேச்சிலே இவ்வளவு இன்பம் உண்டென்பது உண்மையாஞல் உலகமெல்லாம் சதா காலமும் இன்பக் கடலில் மூழ்கியல்லவா தத்தளித்துக்கொண்டிருக்க வேண்டும்? அப்படிக் காணுேமே?' என்று கேட்கலாம். உலகத்தில் எவ்வளவோ இன்பங்கள் இருக்கின்றன. அவைகளை எல்லோருமே அநுபவிக்கிருர்களா? சங்கீதம் எல்லோருக்கும் ஒரேவித இன்பமளிக்கிறதா? இயற்கைக் காட்சிகளை எல்லோருமே பார்த்து மகிழ்கிருர்களா? நதியில் எல்லோருமே துளைந்துவிடுகிருர்களா? கவிதா ரஸத்தை எல்லோருமே அறிந்து பருகுகிருர்களா? மிளகு ரஸத்தில் உள்ள ருசிகூடச் சிலருக்குக் கவிதா ரஸத்தில் இருப்பதில்லை. எந்த இன்பத்தையும் அநுபவிப்பதற்குப் பயிற்சி வேண்டும். மற்றக் கலைகளைப்போல் சம்பாஷணையும் ஓர் அருங் கலையாகும்.

இவ்வுலகில் கருவிலே திருவுடையார் சிலர் உண்டு. இவர்கள் பிறக்கும்போதே கவிவாணர்களாகவும், இசை

வாணர்களாகவும், ஓவியக் கலைஞராகவும், பேச்சுக் கலைஞராகவும் பிறக்கின்றனர். பயிற்சியின்றி இயற்கையாகவே இவர்கள் இத் துறைகளில் மேன்மையடைகின்றனர். நம் போன்ற சாதாரண மனிதர்களுக்கோ, பயிற்சியின்றி எதுவும் கைகூடாது. இத்தகையவர்களுக்கு உபயோகமாகும் பொருட்டு, பேச்சின்பத்தைப் பூரணமாய் அநுபவித்தற்குரிய சில யோசனைகளைச் சொல்லப் போகிறேன்.

* * * *

பேச்சின்பத்திற்கு முதலாவது இன்றியமையாத சாதனம் என்னவென்றால், உங்களுடன் பேசுவதற்குத் தயாராயிருக்கும் மனிதர்கள்தான். தனக்குத்தானே சம்பாஷித்துக்கொள்வதில் இன்பமில்லையென்று நான் சொல்லவில்லை. ஆனால், அத்தகையவர்கள் விரைவில் சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ள பிரசித்தமான சர்க்கார் விடுதிக்குப் போய்ச் சேர நேரிடும். இந்த விடுதியில்மட்டும், தனக்குத் தானே பேசிக்கொள்ள எல்லோருக்கும் பூரண பாத்யதை உண்டு. மற்ற இடங்களில் சகோதர மனிதர்களுடனே சம்பாஷிப்பதுதான் மரபு.

சகோதர மனிதர்களிலுங்கூட நாம் நினைத்தவர்களோடெல்லாம் பேச முடியாது. உதாரணமாக, முஸோலினிப் பெரியாருடனும், மகாத்மா சர்ச்சிலுடனும், ஸ்ரீமான் ஹிட்லர்ஜியுடனும், திருவாளர் ரூஸ்வெல்ட்டுடனும் அநேக விஷயங்கள் நமக்குப் பேசுவதற்கு இருக்கலாம். ஆனால், அவர்கள் நம்முடன் பேச வருவார்களா? ஒரு நாளும் முடியாத காரியம். அவர்கள் பேசாமல் நாம்மட்டும் ஒரு தரப்பான சம்பாஷணை நடத்துவதும் உசிதமன்று. இந்தப் பாத்தியதை பத்திரிகாசிரியர்களுக்குத்தான் உண்டு. 'அடே சர்ச்சிலே!' 'ஓ மாக்டனல்டே!', 'ஏ ஹிண்டன்பர்க்கே!', 'டேய்! சுண்டூர் ராஜாவே!' என்றெல்லாம் பத்திரிகாசிரியர்கள் கூப்பிட்டு எதிரிகள் பதில் சொல்ல இடமின்றி ஒருதரப்பாகப் பேசிக் கொண்டு போகலாம். சாதாரண ஜனங்களுக்கு இது எடுத்ததல்ல.

அது போலவே, அடுத்தாத்துச் சேஷிப் பாட்டியும், எதிர் வீட்டு இருமல் தாத்தாவும் இரவு பகல் இருபத்து நான்கு மணி நேரமும் உங்களுடன் சம்பாஷிக்க விரும்ப லாம். ஆனால், உங்களுக்கு அது விருப்பமாயிராது. ஆகவே, நாம் சம்பாஷிப்பதற்குரிய மனிதர்கள் யார் என்பதை முதலில் கண்டுபிடிக்க வேண்டும். இப்பொழுதுதான், பேச்சி லும் எந்த விஷயத்தைப்பற்றிய பேச்சில் உங்களுக்குப் பிரியம் அதிகம் என்னும் கேள்வி எழுகின்றது. அதே வித மான ருசியுள்ள மனிதர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

ஒரே ஒரு விஷயத்தைப்பற்றிய பேச்சுமட்டும் எல்லோ ருக்கும் சமமாக ருசிப்பதாகும். இதுதான் சாப்பாட்டை யும் சிற்றுண்டியையும்பற்றிய பேச்சு. மகாத்மாக்கள் முதல் சாதாரண மனிதர்கள் வரையில், பரம பாகவதர்கள் முதல் உல்காயதர்கள் வரையில் ஸ்திரீகள், புருஷர்கள், வாலிபர்கள், வயோதிகர்கள் அனைவருக்கும் ருசிகரமான விஷயம் பிரஸாத மகிமைதான். இங்கே மகாத்மாவின் பெயரை நான் இழுத்ததன் பொருட்டுக் கோபமாயிருக் கிறதா? அவர் தமது சுயசரிதம், நான்காம் பாகம், இருபத் தேழாம் அத்தியாயத்தில் சொல்லியிருப்பதைக் கேளுங் கள்:

'உபவாசத்திலும் வேறு உணவுப் பரிசோதனைகளிலும் மிஸ்டர் காலன்பாக் எப்போதும் என்னுடன் இருந்தார். உணவு மாறுதல்களைப்பற்றி அடிக்கடி வாதம் செய்தோம். எப்போதும் பழைய உணவைவிடப் புதிய உணவில் அதிகச் சுவை அநுபவித்தோம். உணவுச் சுவைகளைப்பற்றிய பேச்சுக் கள் அக்காலத்தில் சந்தோஷகரமாயிருந்தன. அவை அநுசித மென்று அப்போது எனக்குத் தோன்றவில்லை.'

ஏன்? உணவைப்பற்றிய பேச்சு மகாத்மாவுக்கே ஒரு காலத்தில் சந்தோஷம் அளித்ததென்றால் . . . ? எனினும், அவர் அநுசிதம் என்று சொல்கிறபடியால் இப்போதைக்கு அதை விடுத்து வேறு விஷயங்களுக்குப் போவோம்.

* * * *

வேறு விஷயங்களுக்குப் போகும்போது, நமக்குள் ருசி மாறுவதைக் காண்கிறோம். ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு விஷயத்தில் ருசி. சுப்பண்ணுவுக்கு அரசியல் சமாசாரங்களைப்பற்றிப் பேசுவதென்றால் பிடிக்கும். "என்ன ஸார்! இன்று பத்திரிகையில் விட்டல்பாய் படேல் என்னபோடு போட்டிருக்கிறார் பார்த்தீர்களா?" என்று கேட்பதற்காக, அவர் குப்பண்ணுவைத் தேடிக்கொண்டு செல்கிறார். குப்பண்ணுவுக்கோ அவரைக் கண்டதும் பரம சந்தோஷம். "ஆமாம், மிஸ்டர் சுப்பண்ணு! இந்தச் சாஸ்திரியும், சாப்ருவும் வாயை மூடிக்கொண்டு சும்மா இருக்கக்கூடாதோ? ஏன் இப்படி உளறு உளறு என்று உளறிக்கொட்டுகிறார்கள்?" என்பதாக ஆரம்பித்து விடுகிறார். இவ்விருவரும் பேச்சில் புகுந்துவிட்டால், வாயில் ஈ புகுந்தது தெரிவதில்லை.

ரங்கசாமிக்கு இலக்கியங்களில் பிரேமை. பொன்னுசாமிக்கும் அப்படியே. இருவரும் சந்தித்துவிட்டால் போதும்; கம்பனுடைய பாட்டில் ஓர் அடியில் ஒரு சொல்லின் சுவையைப்பற்றிப் பேசத் தொடங்குவார்கள். அவ்வளவுதான்; புயல், பூகம்பம் இரண்டும் சேர்ந்தால்கூட அவர்களை அந்தப் பேச்சிலிருந்து வேறு விஷயத்திற்குத் திருப்ப முடியாது.

* * * *

ஆச்சு! டிசம்பர் மாதம் பிறந்துவிட்டது. இனிக் கொஞ்சநாள் சென்னை நகரமெங்கும் கும்பல் கும்பலாக ஜனங்கள் கூடிப் பேசுவதைக் காணலாம். வீட்டிலும், வெளியிலும், டிராமிலும், பஸ்ஸிலும், கடற்கரையிலும், எலக்ட்ரிக் ரெயிலிலும், கிளப்பிலும், ஹோட்டலிலும் ஜனங்கள் கூடிக் கூடிப் பேசுவார்கள். இந்தக் கும்பல்களில் ஒன்றில் நுழைந்து என்ன பேசுகிறார்களென்று கேட்டால், புது மனிதர்களுக்கு ஒன்றுமே புரியாது.

சீட்டாட்டப் பிரியர்கள் இருக்கிறார்கள். "நான் இஸ்பேட்டைத் தள்ளினேன். அவன் கிளாவரை எறிந்தான்.

இரட்டை ஆஸை அடித்து என்ன சொல்கிறாய் என்றேன்'' என்று சுவாரஸ்யமாய்ப் பேசிக்கொண் டிருப்பார்கள்.

சங்கீதப் பிரிய கோஷ்டிகளில், ''என்னதான் சொல்லு! கதையென்றால் பஞ்சாபகேச பாகவதர் பண்ணணும், கேட்கணும். இப்போ கதை பண்ணுகிறவர்களெல்லாம் வெறுந் தனுக்குத்தான்'' என்றும், ''அன்று தக்ஷிணாமூர்த்தி கஞ்சிரா வாசித்தார். அடடா! தேவதுந்துபி என்றால் அது தான்'' என்றும், ''இந்த ஸி. ஆர். சீனிவாசய்யங்கார் வளைச்சு வளைச்சு எழுதுகிறாரே, சங்கீதத்தைப் பத்தி இவருக்கு என்ன தெரியும்?'' என்றும் இது போன்ற பேச்சுக்கள் நடந்துகொண் டிருக்கும்?

* * * *

கிரிக்கெட் அபிமானிகள், ரஞ்சி, நாயுடு, படோடி முதலிய திருநாமங்களையும், சினிமாப் பிரேமிகள் சார்லி நெவாரோ, பெயர்பாங்ஸ், பிக்போர்டு, கோஹர் முதலிய பெயர்களையும் ஜபம் செய்துகொண் டிருப்பார்கள்.

இந்தக் கோஷ்டிகளில், அவரவர்களும் தத்தமக் குரியதைத் தேர்ந்துகொள்ளவேண்டும். இடமில்லாத இடத்துக்குப் போய்ச் சேர்ந்தால் ஆபத்துத்தான். உதாரணமாக, நீங்கள் இலக்கிய கோஷ்டியைச் சேர்ந்தவரென்று வைத்துக்கொள்வோம். கலிங்கத்துப் பரணியின் கவிதை இன்பத்தில் நீங்கள் கழுத்துவரை இறங்கி நீந்திக்கொண் டிருக்கும்போது, திடீரென்று ஒருவர், ''ஏன், ஸார்! மலையாளத்திலே மிளகு என்ன விலை?'' என்று கேட்டால் உங்களுக்குக் கோபம் வருமா வராதா?

பேச்சின்பத்தின் முக்கியமான முதல் விதியை இப்போது அறிந்துகொண்டுவிட்டீர்கள். மற்ற விதிகளை இன்னொரு சமயம் பார்த்துக்கொள்ளலாம். என் விதிகளின் உதவியில்லாமலே பேச்சின்பத்தை நீங்கள் அநுபவிப்பதாயிருந்தாலும், எனக்குச் சம்மதந்தான்.

சில கேள்விகள் கேட்டிருப்பது கஷ்டம் அளிக்கிறது. உதாரணமாக,

'பத்திரிகைகளில் பிரசுரிக்கும்படியாக எழுதுவதற்கு வேண்டிய யோக்கியதை என்னிடம் இருக்கிறதா?' என்று கேட்டிருக்கிறாய், தம்பி! இது தர்மமா? எனக்கு எப்படித் தெரியும்? யாருக்குத்தான் எப்படித் தெரியும்? எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கும் என்று யார் கண்டது? உண்மையில், யோக்கியதையைப்பற்றிக் கவலையே வேண்டியதில்லை. எழுத வேண்டுமென்னும் ஆவல் உனக்கு இருக்கிறதா என்பதுதான் கேள்வி. அந்த ஆவலை அடக்கிக் கொள்ள ஆனமட்டும் முயற்சி செய்து பார். அப்படியும் அது கேளாமல் பீறிக்கொண்டு கிளம்பினால் பேனாவை எடுத்துக்கொள். அப்புறம் உன் தலையில் எழுத்துப்போல் நடக்கிறது!

'என்ன எழுதுவது?' என்று அடுத்தாற்போல் கேட்டிருக்கிறாய். தம்பி! இது ஒரு சுலபமான கேள்வி. ஆனால், முக்கியமான கேள்வி: ஜீவாதாரமான கேள்வி என்றுகூடச் சொல்லலாம். ஆனால் இதற்குப் பதில் கண்டுபிடிப்பது தான் எழுதும் வித்தையில் நூற்றுக்குத் தொண்ணூறு பங்கு என்பது உனக்குத் தெரியுமா? பெரிய ஆசிரியர்கள் எல்லாரும் இந்தக் கேள்விக்குப் பதில் கண்டு பிடிப்பதிலேயேதான் சிரமம் அடைகிறார்கள். உண்மையில், மேற்படி கேள்விக்கு இன்றைய தினம் நான் விடை கண்டுபிடித்திருந்தால், உனக்கு இந்தக் கடிதம் எழுதவே ஆரம்பித்திருக்க மாட்டேன். (நெருக்கடியான சமயத்தில் உன்னுடைய கடிதம் வந்து உதவிற்று என்று சொன்னதன் இரகசியம் இப்போது பிடிபடுகிறதா?)

ஆனால் குறிப்பான, திட்டமான பதில் கண்டுபிடிப் பதில்தான் மேற்சொன்னவிதம் கஷ்டமேதவிர, பொதுவாகப் பதில் சொல்வதில் கஷ்டமில்லை. 'என்ன எழுதுவது?' ஏன்! எது வேண்டுமானாலும் எழுதலாம். மூட்டைப் பூச்சியிலிருந்து முஸோலினிப் பெரியார் வரையில், ஊர் வம்பிலிருந்து உலகப் பொருளாதார நிலைமை வரையில்,

தூக்கணாங் குருவியிலிருந்து துருவ நக்ஷத்திரம்வரையில் சின்னது பெரியது எதைப்பற்றி வேண்டுமானாலும் எழுதலாம். எல்லாம் எழுதும் முறையில்தான் இருக்கிறது.

'எழுதி முடித்த பிறகு, நன்றாயிருக்கிறதா இல்லையா என்று கண்டுபிடிப்பது எப்படி?': தம்பி! உன்னுடைய கேள்விகள் எல்லாவற்றிலும் இதுதான் எனக்கு மிகவும் மகிழ்ச்சி தருகிறது. எழுதியது நன்றாயிருக்கிறதா, இல்லையா என்று கண்டுபிடிக்க விரும்புகிறாயல்லவா? உன்னைப்போல் எழுதத் தொடங்கும் அநேகருக்கு இந்த யோசனை தோன்றுகிறதேயில்லை. ''நன்றாயிருக்கிறதா, இல்லையா என்று கண்டுபிடிக்க வேண்டிய பொறுப்பு பத்திரிகாசிரியருடையது, நமக்கென்ன கவலை அதைப் பற்றி?'' என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால், அந்தத் துர்ப்பாக்கியப் பத்திரிகாசியர்கள், ஒரு கட்டுரை நன்றாயிருக்கிறதா, இல்லையா என்று தீர்மானிப்பதற்குள் படும் நரக வேதனையை அவர்கள் பார்த்திருந்தால் அவ்வளவு குரூரமான எண்ணம் எண்ணமாட்டார்கள். நிற்க.

உன் கேள்விக்கு வருகிறேன். நீ எழுதியது நன்றாயிருக்கிறதா, இல்லையா என்பதை ஒருவாறு கண்டுபிடிப்பதற்கு ஒரு வழி இருக்கிறது. எழுதியதை உடனே பெட்டிக்குள் வைத்துப் பூட்டுவிடு. ஒரு வாரமோ, ஒரு மாதமோ, ஒரு வருஷமோ எவ்வளவு காலம் உன்னால் பொறுத்திருக்க முடியுமோ, அவ்வளவு நாள் பொறுத்திருந்து, பிறகு அதை எடுத்து நீயே படித்துப் பார். எவ்வளவுக்கெவ்வளவு அதிக நாள் கழித்து எடுத்துப் பார்க்கிறாயோ அவ்வளவுக்கு, 'நன்றாய் யிருக்கிறது' அல்லது 'இல்லை' என்பதை நிச்சயமாய்த் தெரிந்துகொள்வாய்.

வைத்திருந்து பார்ப்பதற்கு வேண்டிய பொறுமை உனக்கு இல்லாவிட்டால் இன்னொரு வழி இருக்கிறது: நீ எழுதியதை உன் மனைவியிடம் வாசித்துக் காட்டு. ('இவளுக்கு என்ன தெரியும்?' என்று அலட்சியமாய் நினைக்க வேண்டாம். 'இவ'ளைப் போன்ற ஜனங்கள்தான் நீ எழுதியதைப் பத்திரிகையில் படித்து மகிழவோ, துக்கம்

படவோ போகிறார்கள்.) உன் மனைவி, 'நன்றாயில்லை யென்று சொன்னால் எழுதியதைச் சங்கோசப்படாமல் கிழித்துப் குப்பைத் தொட்டியில் போட்டுவிடு. உன் வீட்டுக் குப்பைத் தொட்டியைவிடப் பத்திரிகாலயத்தின் குப்பைத் தொட்டி எந்த விஷயத்தில் ஒசத்தி என்று கேட்கிறேன். ஒன்றிலுமில்லை.

உன் மனைவி 'நன்றாயிருக்கிறது' என்று சொல்லி விட்டால், இரண்டில் ஒன்று நிச்சயமாகக் கொள்ளலாம்: ஒன்று, கட்டுரை உண்மையில் நன்றாயிருக்க வேண்டும்; அல்லது உன்னிடம் அவளுக்குள்ள காதலின் புதுமை இன்னும் குறையாமல் இருக்கவேண்டும்.

'முதலில் கதை எழுதலாமா? கட்டுரை எழுதலாமா?': கதை எழுதுவதைவிடக் கட்டுரை எழுதுவதுதான் நல்லது என்பது என்னுடைய அபிப்பிராயம். ஏனென்றால், கதை எழுதுவது கஷ்டம். கதை எழுதுவதற்கு முதலாவது கதை ஒன்று வேண்டும். அது கிடைப்பது இலேசல்ல. பிறகு அதை வைத்துக்கொண்டு சுவாரஸ்யமாக எழுத வேண்டும். கொஞ்சம் காது, மூக்கு வைக்கலாமே தவிர, கதையின் மத்திய சம்பவத்தைவிட்டு அதிக தூரம் போகமுடியாது. இன்னொரு பெரிய தொந்தரவு இருக்கிறது. கதையென்றால், 'நன்றாயிருக்கிறது, இல்லை' என்பதாகச் சுலபமாய்ப் பத்திரிகாசிரியர் தீர்மானித்து விடுவார். பத்திரிகாசிரியர்மீது பழி வாங்கும் விருப்பம் உனக்கிருந்தால் கட்டுரை எழுதுவதுதான் நல்லது. அது சுலபமுங்கூட.

கட்டுரை எழுதுவதற்கு வரம்பு ஒன்று வைத்துக்கொள்வது அவசியம் இல்லை. எதிலேயோ பிடித்து, எதிலேயோ முடிக்கலாம். கட்டுரையின் தலைப்புக்கும், கட்டுரையின் விஷயத்திற்கும் சம்பந்தமிருக்கவேண்டிய அவசியமில்லை. இந்தச் சம்பந்தம் எவ்வளவுக்குக் குறைவாயிருக்கிறதோ, அவ்வளவுக்கு நன்றாயிருப்பதாய் ஜனங்கள் எண்ணிக்கொள்வார்கள். அத்தகைய கட்டுரைகளைப் பார்க்கும் பத்திரிகாசிரியர்களும் கொஞ்ச தூரம் படிப்பதற்குள் குழப்பமடைந்து விடுவார்கள். அதைப் படிக்கும் தொல்லையைவிடப் பிரசு

ரித்து விடுவது நல்லதென்று தீர்மானித்து விடுவார்கள்!

'புனை பெயர் அவசியமா? சொந்தப் பெயரே போட்டுக் கொள்ளலாமா?': தம்பி! தர்ம சங்கடம் என்று கேள்விப்பட்டிருக்கிருயா? அப்படி ஒரு நிலைமை உண்டானல் அது இது தான். இரண்டு தரப்பிலும் சாதக பாதகங்கள் அவ்வளவு நிரவலாயிருக்கின்றன.

சாதாரணமாய், உன்னைப் போல் பத்திரிகைகளுக்கு எழுத ஆரம்பிக்கிறவர்கள் எல்லோரும் முதலில் புனை பெயருடன்தான் ஆரம்பிக்கிருர்கள். ஏன்? முதலாவது அவர்களுக்குத் தங்களிடம் நம்பிக்கையில்லை. எழுதியது நன்ருயிருக்குமோ இல்லையோ என்று சந்தேகம். இரண்டாவது, பத்திரிகாசிரியர்களிடம் நம்பிக்கையில்லை. கட்டுரை நன்ருயில்லாதிருந்தபோதிலும் அவர்கள் இடத்தை நிரப்புவதற்காக வெளியிட்டுவிடுவார்களோ என்ற பயம். மூன்ருவது, தங்களைச் சுற்றியுள்ள பந்துக்கள், சிநேகிதர்களிடம் நம்பிக்கையில்லை. சொந்தப் பெயருடன் கட்டுரை வந்துவிட்டால், அவர்கள் அசூயை நோக்குடனே அதைப் பார்ப்பார்கள் என்றும், நன்ருயிருந்தாலும் சொல்லமாட்டார்களென்றும் யோசனை.

ஆனல், புனை பெயரில்மட்டும் தொல்லைகள் இல்லையென்கிருயா? நிச்சயமாய் உண்டு. உன் கட்டுரை புனைபெயருடன் வெளியாகி விடுகிறதென்று வைத்துக்கொள். அதைப் பார்த்தவுடன் உன் மனம் துடிதுடிக்கிறது. அந்தச் சந்தோஷத்தை எல்லாரிடமும் சொல்லவேண்டுமென்று தவிக்கிருய். முதலில் உன் சிநேகிதனிடம் அவசரமாய்ச் சென்று, ''ராமு, விகடனில் 'முந்திரிக்கொட்டை' எழுதியிருக்கிற கட்டுரையைப் படித்தாயா?'' என்று கேட்கிருய். ''ஆமாண்டா, போடா! எவன் எவனே எழுதுகிறதையெல்லாம் யார் படித்துக்கொண்டிருக்கிறது?'' என்று அவன் சொல்கிருன். அப்போது உனக்கு எப்படி இருக்கும்? அவனைப் படிக்கச் செய்யவேண்டுமானல் ''முந்திரிக்கொட்டை யார் தெரியுமா? நான்தான்!'' என்று தெரிவிக்க வேண்டிய

அவசியம் ஏற்படுகிறது. உனக்குத் தெரிந்தவர்கள் கட்டுரையைப் படித்துப் பாராட்டாவிட்டால், அதை எழுதியதுதான் என்னத்திற்கு?

இதைவிட நெஞ்சைப் பிளக்கும்படியான இன்னொரு நிலைமை ஏற்படக்கூடும். வெளியில் சிநேகிதர்கள் எல்லாரிடமும் தெரிவித்துவிட்டு வீட்டுக்கு வருகிறாய். உனது ஸஹதர்மிணி குதூகலத்துடன் ஓடி வந்து, "இன்று விகடனில் ஒரு கட்டுரை வந்திருக்கிறது. ரொம்ப நன்றாயிருக்கிறது" என்று சொல்கிறாள். உன் நெஞ்சு துடிக்கிறது; 'யார் எழுதின கட்டுரை?'' என்று கேட்கிறாய். "வேடிக்கையான பெயர்! 'முந்திரிக் கொட்டை' என்று ஒருவர் எழுதியிருக்கிறார்!" என்கிறாள். உடனே பரவசமடைந்து போகிறாய். சிரித்துக்கொண்டே, "அதை யார் எழுதினது? சொல் பார்ப்போம்'' என்கிறாய். எவ்வளவோ சாடைமாடையாய்க் குறிப்பிட்டுக் காட்டியும் பிரயோசனமில்லை. கடைசியாக, "நான்தான்" என்று தெரிவித்துக்கொள்கிறாய். "ஆமாம்! நீங்கள் எழுதிப் புரட்டலையா?'' என்கிறாள் உன் மனைவி. வாழ்க்கையில் இதைவிடச் சோகரஸம் பொருந்திய கட்டம் வேறு என்ன இருக்கமுடியும்!

பத்திரிகாசிரியரிடமிருந்து உனக்கு வந்த கடிதத்தை எடுத்துக் காட்டி, நீதான் எழுதியது என்று நிருபித்து விடுகிறாய். பலன் என்ன? அவள் சந்தோஷப்படுகிறாளா? நீ எதிர்பார்த்த பரிசையளிக்கிறாளா? ஒன்றுமில்லை. அதற்குப் பதிலாக அவள் முகத்தில் கோபம் கொதிக்கிறது. அது துயரமாக மாறுகிறது. கண்ணில் நீர் ததும்புகிறது. கலகலவென்று பொழிகிறது. விம்மி விம்மி அழத் தொடங்குகிறாள்.

அரை மணி நேரம் அவளைச் சமாதானம் செய்து அழுகை ஒருவாறு நின்ற பிறகு, "முந்திரிக் கொட்டை என்று ஏன் பெயர் வைத்துக்கொண்டீர்கள்?'' என்கிறாள். உன்னுடைய தவறு என்னவென்று அப்போதுதான் உனக்குப் புலனாகிறது. அழகான சொந்தப் பெயரைப் போட்டுக்கொள்ளாமல் போனோமே என்று அப்போது பச்சாத்தாபப்படுவதில் என்ன பயன்?

'கட்டுரைகளுடன் பத்திரிகாசிரியர்களுக்கு எவ்வாறு கடிதம் எழுத வேண்டும்?'! இது உன் கடைசிக் கேள்வி. கீழே சில நகல் கடிதங்கள் கொடுத்திருக்கிறேன். அவைகளில் ஏதேனும் ஒன்றைத் தழுவிக் கடிதம் எழுதலாம்:

"இது என் ஆயுளிலேயே நான் முதன் முதலாக எழுதிய கட்டுரை. ஆதலால், இதில் குற்றங்குறைகள் இருந்தாலும் சீர்திருத்தி வெளியிட்டு ஊக்கமளிக்குமாறு வேண்டிக் கொள்கிறேன்."

"அன்பீர்! சென்ற முப்பத்திரண்டு வருஷ காலமாய் நான் பல தமிழ்ப் பத்திரிகைகளுக்கும் விஷய தானம் புரிந்து வந்திருக்கிறேன். என் கட்டுரைகள் வெளிவந்த பத்திரிகைகள் எல்லாம் மாண்டு போயின. நான்மட்டும் உயிரோடிருக்கிறேன். ஆகையால், இத்துடன் அனுப்பியுள்ள கட்டுரையைத் தவருது வெளியிடவும்."

"இத்துடன் அனுப்பி இருக்கும் என் கட்டுரை என்னிடம் கைவசம் இருக்கும் 124 கட்டுரைகளில் ஒன்றுதான். தாங்கள் கோரிஞல் பாக்கி 123-யும் அனுப்பி வைப்பேன்."

"என் வாழ்நாளில் ஒரு கட்டுரையாவது எழுதிப் பத்திரிகையில் வெளியிட வேண்டுமென்பது என் ஜீவிய மனோரதம். ஆகையால் இக்கட்டுரையை அடுத்த பிப்ரவரி மீ 1௳ இதழில் அவசியம் வெளியிட்டு என் மனோரதத்தை நிறைவேற்றுவீர்கள் என்று நம்புகிறேன்."

"நவரசங்களும் பொங்கித் ததும்புமாறு நான் எழுதியுள்ள இந்தச் சிறந்த கட்டுரை தங்கள் பத்திரிகையின் அடுத்த இதழை அலங்கரிக்கும் என்பது எனது திடமான நம்பிக்கை."

"எளியேன் இத்துடன் அனுப்பியுள்ள சிறு கதையைத் தாங்கள் தயைகூர்ந்து மனமுவந்து அங்கீகரிப்பீர்களாயின், அடியேன் மனமார்ந்த வந்தனம் செலுத்தி மிக்க நன்றியுள்ளவனுயிருப்பேன். ஆனல் நீங்கள் இந்தக் கட்டுரையைப் பிரசுரியாவிடின் அதற்காக நான் ஒரு சிறிதும் வருத்தப்படப் போவதில்லை என்பதைமட்டும் உறுதியாக நம்புங்கள்."

"ஆனந்த விகடன் மானேஜர் அவர்களுக்கு, நான் உங்களுடைய 17,235ஆவது சந்தாதார். இந்தக் கட்டுரையை நீங்கள் வெளியிட்டால், என்னுடைய சிநேகிதர்களிடம் சொல்லி, அவர்களையும் சந்தாதாரராகச் செய்வேன்."

"ஐயா! நான் ஒரு ஹரிஜனன். உங்கள் பத்திரிகை ஹரிஜனங்களுக்காகப் பாடுபடுவது உண்மையானால், நான் அனுப்பி இருக்கும் இந்தக் கட்டுரையைப் பிரசுரிக்க வேண்டியது. இல்லாவிட்டால் உங்களுடைய குட்டு வெளியாகி விடும்!"

"தாங்கள் பெரிய மனது செய்து இக் கட்டுரையை வெளியிட்டால், அந்த நன்றியை மறவாமல் ஏதோ எனக்குத் தெரிந்தவரை ஒவ்வோர் இதழுக்கும் ஏதாவது அனுப்ப முயல்வேன்."

"எமது அரும் பெரும் பொருள் பொதிந்த கட்டுரைகளைத் தாங்கி வெளிவரும் தகுதி நும் திங்கள் இரு முறை விகடத் தாளுக்கு இல்லை என்பதை நன்கு அறிவோமாயினும், நுண்ணறிவில்லாத மாக்களுக்குத் தமிழ்மொழியின் அரும்பெருஞ் சிறப்பை அறிவுறுத்துவான்வேண்டி இக் கட்டுரை வரைந்து அனுப்பலுற்றோம். வெளியிட்டு உய்வீராக."

தம்பி! மேற்கண்ட கடித வகைகளில் ஏதேனும் ஒன்றைப் பின்பற்றி எழுதலாம். ஆனால், ஒரு விஷயம்: உன்னுடைய கட்டுரை விஷயத்தில் உனக்குத் தயக்கம் இருந்து, அது வெளிவராமல் போனால் நல்லது என்று நினைத்தாயானால்தான் மேற்கண்ட வகைகளில் கடிதம் எழுத வேண்டும். அத்தகைய கடிதத்துடன் போகும் கட்டுரை மனிதர் கண்காணாத இடத்தை அடையும் என்று நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பது பங்கு நீ எதிர்பார்க்கலாம். ஆனால், பத்திரிகாசிரியர் உன் கட்டுரையை உடனே பார்த்துப் பிரசுரிக்க வேண்டுமென்று விரும்பினால், கடிதம் ஒன்றும் எழுதாதே. கட்டுரையின் தலைப்பில் உன் முழு விலாசத்தையும் எழுதி, அரை அணாச் செலவில் புக்போஸ்டில் அனுப்பினால் போதுமானது. ஏனென்றால், மற்ற மனிதர்கள்

எல்லாரையும் போலவே பத்திரிகாசிரியர்களும் கர்வம் பிடித்தவர்கள். தங்களுடைய வேலைக்குப் பிறர் யோசனை சொல்வதென்றாலே அவர்களுக்குப் பிடிப்பதில்லை.

மேற்கண்ட விதி முறைகளை எல்லாம் அநுசரித்து நடந்தும், 'பொல்லாத பத்திரிகாசிரியர்கள் கட்டுரைகளைப் பிரசுரிக்காவிட்டால் என்ன செய்வது?' என்று கேட்பாயானால், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா சிசுபாலனுடைய நூறு குற்றங்களைப் பொறுத்ததைப்போல, நீயும் நூறு கட்டுரைகள் பிரசுரிக்கப்படாமல் போகும் வரையில் பொறுமையுடன் அனுப்பிக்கொண்டிரு. அதற்கும் பிறகு அவர்களைப் பழி வாங்குவதற்குப் பின்வரும் இரண்டு முறைகளில் ஒன்றைக் கைகொளயலாம்:

(1) நீயே சொந்தப் பத்திரிகை ஒன்றை ஆரம்பித்து விடு. அல்லது, (2) 'பத்திரிகைகளுக்கு எழுதுவதில் வெற்றி பெறுவது எப்படி?' என்ற பெயருடன் ஒரு புத்தகம் எழுதிப் பிரசுரித்து விடு.

# 7. அரசியல் பரீட்சை

செல்வச் சிரஞ்சீவித் தம்பி சோணுசலத்துக்குச் சர்வாபீஷ்டமும் சித்திக்கும்படியாக ஆசீர்வாதம். உனது அருமை மிக்க கடிதம் கிடைத்தது. உன்னுடைய சங்கடம் என்ன என்பதை அறிந்துகொண்டேன்.

சர்க்கார் பரீட்சைகளில் மாணுக்கர்கள் அரசியல் விஷயங்களைப்பற்றித் தாறுமாருன அபிப்பிராயத்தைத் தெரிவித்திருப்பதாகவும், இத்தகைய பதில்கள் அளிக்கும் மாணுக்கர்களின் பள்ளிக்கூடங்களுக்குச் சர்க்கார் 'கிரான்'டில் மண் விழுந்து விடுமென்றும் கல்வி இலாக்கா டைரக்டர் சுற்றறிக்கை விட்டிருப்பது உண்மைதான். கல்வி மந்திரியும் சட்ட சபையில் மேற்படி சுற்றறிக்கையை ஆதரித்து விட்டார். "அரசியல் சம்பந்தமான கேள்விகளைக் கேட்காமலேயே இருந்துவிடலாமே?" என்று ஒரு மெம்பர் சொன்னதையும் அவர் ஒப்புக்கொள்ளவில்லை. "கேள்வி கேட்கத்தான்படும்; பதில்கள் அளித்துத்தான் தீர வேண்டும்" என்று சொல்லிவிட்டார்.

ஆகையால் உனக்கும், உனக்குக் கல்வி அளிக்கும் பள்ளிக்கூடத்துக்கும் ஆபத்தைத் தேடிக்கொள்ளாதிருக்க விரும்பிணுயாணுல், பரீட்சைகளில் அரசியல் சம்பந்தமான கேள்விகளுக்குத் தகுந்தபடி பதில் சொல்ல உனக்குத் தெரிந்திருக்க வேண்டும். ஆகவே, உனக்கும் உன்னைப் போன்ற மாணுக்கர்களுக்கும் உபயோகமாகும்படியாக எனக்குத் தெரிந்த வரையில், அரசியல் சம்பந்தமான சில உத்தேசக் கேள்விகளையும் பதில்களையும் இங்கே வெளியிடுகிறேன்.

நல்ல மாட்டுக்கு ஒரு சூடு போதுமல்லவா? இந்த உதாரணக் கேள்விகளையும், பதில்களையும் வைத்துக்கொண்டு, அப்புறம் நீ உன் சமயோசித புத்தியைக் கொண்டு 100க்கு

100 மார்க்கு வாங்குவாய் என்பதில் எனக்குச் சந்தேக மில்லை.

## அரசியல் — பொது

1. கேள்வி: அரசாங்கம் என்ருல் என்ன? அதன் பெருமை யாது?

பதில்: ஒரு தேசத்தின் ஜனங்களிடம் அதிகமாகப் பணம் தங்கி அதனுல் அவர்கள் கெட்டுப் போகாமல் பார்த்துக் கொள்ளும் ஸ்தாபனத்திற்கு அரசாங்கம் என்று பெயர். திருடர்கள் என்ற ஒரு கூட்டத்தாரும் இதே காரியத்தைச் செய்து வருகிருர்கள். இவர்களுடைய போட்டியை அடி யோடு ஒழித்துத் தாங்களே ஏகபோகமாய் அவ்வுரிமையை அநுபவிப்பதுதான் அரசாங்கத்தின் பெருமை.

2. கேள்வி: பிரஜைகள் என்ருல் யார்? இவர்க ளுடைய இயல்பு என்ன?

பதில்: அரசாங்கத்திற்கு வரி கொடுப்பதற்காக ஏற் பட்ட பிராணிகளுக்குப் பிரஜைகள் என்று பெயர். ஓயாமல் ஏதாவது ஒரு காரணத்திற்காக மூக்கால் அழுதுகொண்டே யிருப்பது இவர்களுடைய இயல்பு. தங்களுக்கு என்ன குறைகள் நேர்ந்தாலும் அவைகளுக்கெல்லாம் காரணம் அரசாங்கந்தான் என்று சொல்லுவதும் இவர்கள் வழக்கம். மொத்தத்தில், சுயபுத்தி இல்லாதவர்கள்.

3. கேள்வி: ஜனநாயகம் என்ருல் என்ன? அதைப் பற்றி உனக்குத் தெரிந்ததை எழுதுக.

பதில்: இது ஜனங்களைப் பீடிக்கும் ஒருவிதக் கொடிய வியாதி. ஸூயஸ் கால்வாய்க்கு மேற்கே உள்ள ஜனங் களுக்கு இந்த நோய் வந்தால் அதிகத் தீமை விளையாது. அதற்குக் கிழக்கே உள்ள நாடுகளில் முக்கியமாக, இந்தியா தேசத்தில் உள்ள ஜனங்களுக்கு இந்த நோய் வந்துவிட்டால் பிழைப்பது அரிது. ஆகையால் அரசாங்கங்கள் இந்த விஷ யத்தில் சர்வ ஜாக்கிரதையுடன் இருக்க வேண்டும்.

## இந்திய அரசியல்

4. கேள்வி: இந்தியா தேசத்தின் முக்கியமான சிறப்பு யாது?

பதில்: பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் கிரீடத்தில் ஒளி சிறந்த இரத்தினமாகத் திகழ்வதுதான் இந்தியாவின் அரும் பெருஞ் சிறப்பாகும்.

5 கேள்வி: இந்தியாவில் வாழும் ஜனங்களையும், அவர்களுடைய வாழ்வு முறையையும்பற்றி உனக்குத் தெரிந்தவைகளை எழுது.

பதில்: இந்தியாவின் ஜனங்கள் காட்டுமிராண்டிக ளாகவும், நாகரிகமற்றவர்களாகவும் வெகு காலம் வாழ்ந்து வந்தனர். சென்ற 150 வருஷ காலமாக அவர்கள் நாகரிக மடையத் தொடங்கியிருக்கிறார்கள். இன்னும் ஆயிரம் வரு ஷங்களுக்குள் அவர்கள் ஒருவாறு நாகரிகம் அடைந்து விடலாம்.

6. கேள்வி: இந்தியாவின் அரசியல் சரித்திரத்தில் மிக முக்கியமான வருஷம் எது? ஏன்?

பதில்: 1757ஆம் வருஷம். பிளாஸி சண்டை அவ் வருஷத்தில்தான் நடந்தது. அந்தச் சண்டையில் 30,000 முரட்டுக் கறுப்பு மனிதர்களை 300 வெள்ளை வீரர்கள் எதிர்த் துப் பராக்கிரமச் செயல்கள் பல புரிந்து புறமுதுகிட்டோடச் செய்து வெற்றிக் கொடி நாட்டினார்கள்.

7. கேள்வி: பிரிட்டிஷ் ஆட்சி ஏற்படுவதற்கு முன்னால் இந்தியாவின் நிலைமையையும், அதற்குப் பிறகு இந்தியாவின் நிலைமையையும் ஒப்பிடுக. முக்கியமான வித்தியாசம் என்ன?

பதில்: பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்னால் இந்தியாவில் திருடர் பயம் அதிகமாயிருந்தது. மராட்டியர்கள், தக்கர் கள், பிண்டாரிகள் முதலிய கொள்ளைக்கூட்டத்தார் ஜனங் களுடைய பொருள்களைக் கொள்ளையடித்துக்கொண் டிருந் தார்கள். இப்போது அத்தகைய பயம் அறவே கிடையாது. ஏனெனில், ஜனங்களிடம் திருடுவதற்கோ, கொள்ளையடிப்ப தற்கோ பணம் ஒன்றுமில்லை.

8. கேள்வி: இந்திய சரித்திரத்தில் சில வீரர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

பதில்: அலெக்ஸாண்டர், கிளைவ், ஜெனரல் டையர்.

9. கேள்வி: 'நுண்ணிய காரியம் எண்ணித் துணிக'—இந்தியாவின் தற்கால அரசியலிலிருந்து உதாரணங் கூறி விளக்குக.

பதில்: இராஜாங்கக் காரியங்களில் சின்ன விஷயமாயிற்றே என்று அலட்சியம் செய்துவிடக்கூடாது. தீர யோசித்தே செய்யவேண்டும். உதாரணம்: அப்பா சாகிப் பட்டவர்த்தன் என்னும் அரசியல் கைதி சிறைக்கூடத்தில் கக்கூஸ் சுத்தம் செய்கிறேன் என்று சொன்னார். சுத்தம் செய்துவிட்டுப் போகட்டுமே என்று சூபரின்டெண்ட் விட்டு விடவில்லை. முடியாது என்று சொல்லிவிட்டார். அந்தக் கைதி பிறகு அதற்காகப் பட்டினி கிடக்கலானார். இதை முன்னிட்டு மற்றொரு கைதியான காந்தியும் பட்டினி கிடக்க ஆரம்பித்தார். பிறகு பம்பாய் அரசாங்கம் இவ் விஷயத்தைக் கவனிக்கத் தொடங்கியது. சிறைச்சாலை இலாக்கா இன்ஸ்பெக்டர் ஜெனரல், கைதி காந்தியிடம் சென்று, அது விஷயம் யோசனை செய்யப்படுமென்றும் பட்டினியை நிறுத்தும்படியும் சொன்னார். காந்தியும், பட்டவர்த்தனரும் அப்படியே செய்தார்கள். இரண்டு மாத காலம்வரையில் சிறைக்கூடத் தலைவருக்கும், பம்பாய் அரசாங்கத்துக்கும், டில்லி அரசாங்கத்துக்கும், லண்டனுக்கும் கடிதங்களும் தந்திகளும் போய் வந்துகொண் டிருந்தன. இதற்குள் பட்டவர்த்தன் மறுபடியும் பட்டினி தொடங்கப் போவதாகப் பயமுறுத்தினார். கடைசியில், 1729 கடிதங்களும், 397 தந்திகளும் போய்வந்த பிறகு, கைதி பட்டவர்த்தன் மற்ற வேலைகளுக்குக் குந்தகமில்லாமல் சிறைச் சாலைக் கக்கூஸ்களைக் கூட்டலாம் என்று அநுமதி பிறந்தது.

நீதி: அரசியலில் நுண்ணிய காரியமும் எண்ணித் துணியவேண்டும்.

10. கேள்வி: பின்வரும் விஷயங்களைக் குறித்து உனக்குத் தெரிந்தவைகளை எழுது: (1) இமய மலை, (2) மோர் (3) பட்டாசு.

பதில்: 1. இமயமலை இந்தியாவின் பாதுகாப்புக்குப் பெரியதோர் அபாயமாயிருக்கிறது. இமய மலைக்கும்

மகாத்மா காந்தி என்னும் இராஜாங்கப் புரட்சித் தலைவருக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. 'இந்தியாவில் பார்க்கத் தகுந்தவை இரண்டு. ஒன்று இமயமலை, இரண்டு மகாத்மா காந்தி' என்று வெளிநாட்டார் கருதுகிறார்கள். மகாத்மா காந்தியும் அடிக்கடி இமய மலையை உதாரணமாக எடுத்துச் சொல்கிறார். தாம் செய்யும் தவறுகளையுங்கூட 'இமாலயத் தவறுகள்' என்கிறார். 'இமய மலையை அசைக்க முடியாதது போல் சத்தியத்தையும் அசைக்க முடியாது' என்கிறார். ஆகையால் இமய மலையை இப்போது உள்ள இடத்திலிருந்து அப்புறப்படுத்திச் சந்திரமண்டலத்துக்கோ, செவ்வாய்க் கிரஹத்திற்கோ அனுப்பிவிடப் பிரயத்தனம் செய்ய வேண்டும்.

2. பாலைக் காய்ச்சி உறை குத்திப் புளித்தபின் கடைந்து வெண்ணெய் எடுத்த பிறகு பாக்கி நிற்கும் திரவ பதார்த்தம் மோர் என்னும் பெயரால் வழங்கப்படுகிறது. இந்த மோரில் விடமின் என்னும் ஜீவ சத்து இருப்பதாகவும், அதனால் தேகாரோக்கியத்திற்கு இது மிகவும் நல்லது என்றும் இது காறும் சொல்லப்பட்டு வந்தது. ஆனால், இப்போது மோரில் விடமின் அல்லாது வேறொரு பயங்கரமான, கண்ணுக்குத் தெரியாத கிருமி இருப்பதாகவும், அது மனிதர்களுடைய இரத்தத்தில் இராஜத் துவேஷ உணர்ச்சியை ஊட்டுவதாகவும் தெரிய வருகிறது. இதைக் கண்டு பிடித்தவர் சென்னை சர்க்காரின் லா மெம்பர் ஸர் கிருஷ்ணன் நாயர் அவர்கள். ஆகையால் பொதுவாக இந்தியா தேசத்திலும், முக்கியமாகப் பள்ளிக்கூடங்கள் கலாசாலைகளில் உள்ள ஹாஸ்டல்களிலும் மோரின் உபயோகத்தைக் குறைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும். தற்போது கூடிய வரையில் மோரின் தீய சக்திகளைக் குறையச் செய்துவரும் இடையர் இடைச்சிகளுக்கு சர்க்கார் நன்கொடை அளித்து ஊக்கப்படுத்துவதுடன், அவர்களுக்கு வேண்டிய தண்ணீர் 'ஸப்ளை'யும் செய்து வரவேண்டும்.

3. இதுகாறும் பட்டாசு என்பது தீபாவளியின்போது சிறுவர் சிறுமியர் வெடிக்கச் செய்து மகிழும் விளையாட்டுச் சாமானாக இருந்து வந்தது. சமீபத்தில் அது சென்னை சட்டசபையின் தீர வீர அங்கத்தினர்களைப் பயப்படுத்திச் சிதறி ஓடச் செய்வதற்குக் காரணமாயிருந்தபடியால், பட்டாசுக் கட்டு இறக்குமதியைத் தடுத்துவிடுவது அவசியமாகும். அதனால் சர்க்காரின் இறக்குமதி வரியில் ஏற்படும் குறைவை, தீபாவளி வரி ஒன்று ஏற்படுத்தி வசூலித்து ஈடு செய்யலாம்.

# 8. வியாதிக்கு ஸ்நானம்

'சகுணப் பிரம்மம் நல்லதா? நிர்க்குணப் பிரம்மம் நல்லதா?' என்று என்னைக் கேட்பீர்களாயின், 'நிர்க்குணப் பிரம்மந்தான் எனக்குப் பிடித்திருப்பது' என்று தயங்காமல் பதில் கூறுவேன். போதும் ஐயா, போதும்! இந்த எண் சாண் உடம்பைக் கட்டிக்கொண்டு நான் மாரடிப்பது போதாதா? எம்பெருமானாவது, உடம்பும் அதனால் ஏற்படும் தொல்லைகளும் இல்லாதவராயிருக்கட்டுமே!

அதிலும் இறைவனைச் சகுணப் பிரம்மமாக வைத்துக் கொண்டால் நம்மையெல்லாம் போல் சாதாரண உடம்பா அவருக்கு?

ஸஹஸ்ர சீர்ஷா புருஷ : ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத்

ஆண்டவனே! கேவலம் ஒரு தலையும், இரண்டு கண்ணும், இரண்டு காலும் உடைய எங்களாலேயே இவ்வுடம்பை நோய்கள், மருந்துகள், டாக்டர்களிடமிருந்து தப்ப வைத்துப் பாதுகாத்தல் பிரம்மப் பிரயத்தனமாயிருக்கிறதே; ஆயிரந் தலைகளும் அதற்கேற்ற மற்ற அவயவங்களும் உடைய பகவானுடைய கதி என்ன? உதாரணமாக, பகவான் எப்போதேனும் தமது அருமைப் பக்தன் எவனையாவது நினைத்துக்கொண்டு ஒரு துளி கண்ணீர் விடுகிறார் என்று வைத்துக் கொள்ளலாம். அந்தச் சமயம் கண் வைத்தியர் ஒருவர் பகவானைத் தப்பித் தவறிக் கண்டுபிடித்து கண்ணில் கெடுதல் என்றும், கண்ணாடி போட்டுத்தான் ஆகவேண்டுமென்றும் சொல்லிவிடுகிறார். சுவாமி! பகவானே! சென்னையிலுள்ள கண்ணாடிக் கடைகளில் எல்லாம் சேர்ந்து தங்களுக்குப் போதுமான மூக்குக் கண்ணாடிகள் கிடைக்குமா? சந்தேகம்! சந்தேகம்!

'குருமணி மகுடகோடி முடித்தலை குலுங்கும் வண்ணம்
இருபது செவியினூடு நுழைந்ததவ் வெழுந்த ஓசை'

என்று அனுமான் ஆர்ப்பரித்த ஓசை இராவணன் காதுகளில் நுழைந்ததைக் கம்பர் வர்ணிக்கிறார். இராவணனுக்கு இருபது செவிகள்தான் இருந்தன; பகவானுக்கோ இரண்டாயிரம் செவிகள். சென்னை ரேடியோக்களில் வரும் சங்கீதத்தைச் சில சமயம் இரண்டு காதால் கேட்பதே நமக்குச் சகிக்க முடியாமல் இருக்கிறதே; இரண்டாயிரம் செவிகளாலும் கேட்டு இறைவன் எப்படிச் சகிப்பார்?

தெனாலிராமனின் முன்பு காளி மாதா பிரசந்நமானதும் அவன், 'தாயே! ஒரே மூக்குள்ள எனக்கு ஜலதோஷம் வந்தாலே உயிரை விட்டுவிடலாம்போலிருக்கிறதே! ஆயிரம் மூக்குள்ள நீ என்ன செய்வாய்?' என்று கேட்ட கதை நேயர்களுக்குத் தெரிந்ததே. இப்படித் தெனாலிராமன் கேட்டதன் சுவாரஸ்யத்தை என்னைவிட நன்றாக அறிந்து அநுபவிக்கக் கூடியவர்கள் யாரும் இரார் என்பது திண்ணம்.

'நோயற்ற வாழ்வு' என்னும் தலைப்பின்கீழ் என்னுடைய ஜலதோஷ சரித்திரத்தின் ஓர் அத்தியாயத்தை 'விகடன்' பழைய நேயர்கள் படித்திருக்கிறார்கள். சென்னையின் பிரபல டாக்டர்களிடம் நான் யோசனை கேட்டதைப் பற்றி அதில் விஸ்தாரமாக விவரித்திருக்கிறேன். புதிய நேயர்களின் நன்மையை முன்னிட்டே மேற்படி யோசனைகளின் சாராம்சத்தைக் கீழே தருகிறேன்.

(1) டாக்டர் ரங்கராயணன் அவர்கள், தொண்டை, மூக்கு, காது மூன்றிலும் மூன்று ஆபரேஷன் செய்யவேண்டுமென்று சொன்னார்.

(2) டாக்டர் சங்கராச்சாரி, 'ஆபரேஷன் ஒன்றும் தேவையில்லை. அதிகமாக உடம்பைப் போர்த்திக்கொள்ளாமலும், குளிர்ந்த ஜலத்தில் குளித்தும் பழக்கப்படுத்திக் கொண்டு வந்தால் நாளடைவில் சரியாய்ப் போய்விடும்' என்றார்.

(3) டாக்டர் மரியனின் அஸிஸ்டெண்ட் அவர்கள், 'தொண்டையில் ஒரு கெடுதலும் இல்லை. மூக்கில்தான் இருக்கிறது. மூக்கைக் கட்டாயம் ஆபரேஷன் செய்ய வேண்டும்' என்றார்.

(4) டாக்டர் மரியன், 'தொண்டையில் டான்ஸில் இருக்கிறது. ஒரு மாதம் மருந்து போட்டுக்கொண்ட பிறகு ஆபரேஷன் செய்துகொள்ள வாரும்' என்றார்.

அச்சமயம் வைத்திய கலாசாலை மாணவிகளும் மாணவர்களும் என் தொண்டையைப் பார்த்து 'டான்ஸில்' எப்படியிருக்குமென்று தெரிந்துகொண்டார்கள்.

(5) எனது நண்பரான எம். பி. பி. எஸ். ஒருவரிடம் மேற்கண்ட விவரங்களைச் சொன்னேன். அவர் தொண்டையைப் பார்த்துவிட்டு, 'உமக்கு டான்ஸில் இருக்கிறதென்று எந்த ம . . . ன் சொன்னது?' என்றார்.

மெதுவாக என் தொண்டையையும் மூக்கையும் டாக்டர்களிடமிருந்து தப்புவித்துக்கொண்டு வந்த வழியே போய்ச் சேர்ந்தேன்.

மேற்கூறிய அனுபவங்களுக்கு முன்னும் பின்னும் ஜலதோஷத்துக்காக நான் செய்துகொண்ட சிகிச்சைகள் கொஞ்சமல்ல, நஞ்சமல்ல. அவைகளை அதிகமாய் விஸ்தரிக்காமல் ஜாபிதாவைமட்டும் இங்கே தருகிறேன்.

(1) புழுங்கலரிசி மூட்டையைத் தலைக்கு வைத்துக்கொண்டு படுத்தல். (அம்மாவின் வைத்தியம்)

(2) வறட்டு அவல் சாப்பிடுதல். (பாட்டியின் வைத்தியம்)

(3) முறமுறவென்றிருக்கும் அடை சாப்பிடுதல். (அடுத்த வீட்டு அத்தையின் வைத்தியம்)

(4) சுடச்சுடக் காப்பி குடித்தல். (சிநேகிதர்களின் வைத்தியம்)

(5) 'ஸ்மெல்லிங் ஸால்ட்' முகருதல். (டாக்டர் வைத்தியம்.)

(6) யுகலிப்டிஸ் ஆயில் முகருதல். (டாக்டர் வைத்தியம்)

(7) யுகலிப்டிஸ் ஆயிலைச் சர்க்கரையில் விட்டு உள்ளுக்குச் சாப்பிடுதல். (முதலில் இரண்டு துளியில் ஆரம்பித்துக் கடைசியில் ஒரு சின்னப் புட்டியை அப்படியே சாப்பிடுகிற வரைக்கும் வந்துவிட்டேன்)

(8) கால்களை வெந்நீரில் வைத்துக்கொண் டிருத்தல். (இயற்கை வைத்தியம்)

(9) பட்டினி கிடத்தல். (இயற்கை வைத்தியம்)

(10) திணியத் திணியச் சாப்பிடுதல். (வீட்டு வைத்தியம்)

(11) சியவனப் பிராச லேகியம். (ஆயுர்வேதம்)

(12) 'பெப்ஸ்' முதலிய முந்நூற்றிருபத்தைந்து வகை பேடெண்ட் மருந்துகள். (விளம்பர வைத்தியம்)

(13) மருந்து கலந்த தண்ணீரை அதற்கென்று ஏற்பட்ட கண்ணாடிக் கருவியினால் மூக்கில் ஏற்றிச் சுத்தம் செய்தல். (டாக்டர் வைத்தியம்)

(14) தொண்டையில் பலவித மருந்து தடவுதல். (டாக்டர் வைத்தியம்)

(15) மருந்து ஜலத்தினால் தொண்டையை அலம்பிக் கொப்புளித்தல்.

(16) சீர்ஷாசனம் — தலை கீழாக நிற்றல். (யோக வைத்தியம்)

(17) நல்லெண்ணெய் அடிக்கடி தேய்த்து ஸ்நானம் செய்தல். (சந்தேக வைத்தியம்)

(18) நல்லெண்ணெயே தொடாமல் இருத்தல். (சந்தேக வைத்தியம்)

(19) திறந்த வெளியில் படுத்துக்கொள்ளுதல். (சந்தேக வைத்தியம்)

(20) ஜன்னல்களை இறுக்கி மூடிவிட்டுப் படுத்துக் கொள்ளுதல். (சந்தேக வைத்தியம்)

(21) ஒரு முறை டான்ஸில் ஆபரேஷன். (டாக்டர் வைத்தியம்)

(22) ஒரு முறை எலெக்டிரிக் காடரிஸேஷன் (டாக்டர் வைத்தியம்)

இவ்வளவு சிகிச்சைகளும் என்னுடைய ஜலதோஷத்துக்கு ஆகாரங்களாகப் பயன்பட்டு வந்தனவென்று தோன்றியது.

பதினைந்து வருஷத்துக்கு முன்னால் இரண்டு மூன்று

மாதத்துக்கு ஒரு தடவைதான் எனக்கு ஜலதோஷம் வரும். நாளடைவில் மாதத்துக்கு ஒரு தடவை அதன் விஜயத்தை எதிர்பார்க்கும் நிலைமை ஏற்பட்டது. பிறகு பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை, அப்புறம் வாரத்தில் மூன்று நாலு நாள் . . . கடைசியாக ஜலதோஷமில்லாத நாளே இல்லையாயிற்று.

இந் நிலைமையில் நான் அடைந்த அநுகூலங்கள் பல. முக்கியமாக, புதிய மனிதர்களை அறிமுகம் செய்துகொள்வதற்கு ஜலதோஷம் ஒரு சிறந்த சாதனமென்று கண்டேன். ரெயிலில் ஏறி, உட்கார வேண்டியதுதான் தாமதம். எதிரில் இருப்பவர், 'என்ன ஸார்! ஜலதோஷம் போலிருக்கு' என்று பேசத் தொடங்கிவிடுவார். 'ஆமாம்!' என்றதும் வைத்தியம் சொல்ல ஆரம்பிப்பார்.

கொஞ்ச நாளைக்கெல்லாம் இவ்விஷயத்தில் அளவில்லாத பெருமை கொள்ளலானேன். யாராவது ஜலதோஷ சிகிச்சை சொல்ல ஆரம்பித்தார்களானால், அவர்களை நான் அதிகம் பேச விடுவதில்லை.

''இங்கே பாருங்கள், ஸார்! உங்களுக்கு எல்லா விஷயமும் தெரிந்திருக்கலாம். ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், இந்த ஜலதோஷ விஷயம் இருக்கிறதே, அதில்மட்டும் நான்தான் 'அதாரிட்டி!'. வேறு யார் சொல்லுவதையும் நான் கேட்க முடியாது. பதினைந்து வருஷத்து அநுபவமா சும்மாவா?'' என்றேன்.

இவ்வளவு பெருமையுடன் இருந்த எனக்கு ஏழெட்டு மாதத்துக்குமுன் கர்வ பங்கம் ஏற்பட்டது.

'கற்றது கைம்மண்ணளவு;
கல்லாதது உலகளவு'

என்னும் உண்மையை வெகு நன்றாக உணர்ந்தேன். அதற்கு முன் நான் அறியாத ஒரு புதுச் சிகிச்சை தெரிய வந்தது. அதை அநுசரித்து வருவதில், நேயர்களே! இவ்வளவு நாளாக என்னுடன் இணைபிரியாதிருந்து வந்த ஜலதோஷம் கடைசியாக விட்டுப் பிரிந்துவிடும்போல் இருக்கிறது. அதை விடத் துக்ககரமான விஷயம் என்னவென்றால், ஜலதோஷ

சிகிச்சை சம்பந்தமாக என்னைவிடத் தெரியாதவர் ஒருவர் உண்டு என்பதை நான் ஒப்புக்கொள்ள வேண்டி வந்தது தான்.

ஸ்ரீமான் டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களைப் பற்றி 'விகடன்' நேயர்கள் ஏற்கெனவே நன்கறிவார்கள். சென்ற வருஷம் மழைக் காலத்தில் ஒரு நாள் அவருக்கு உடம்பு சுரமென்றும் படுத்த படுக்கையாயிருக்கிறாரென்றும் கேள்விப்பட்டதன்மேல், அவரைப் பார்க்கச் சென்றிருந்தேன். அவர் வீடு அடைந்ததும் நான் கண்ட காட்சி — அதைக் குறிப்பிடத் 'திகைப்பு', 'பிரமிப்பு' என்பனவெல்லாம் சரியான வார்த்தைகளல்ல. அப்போது மழை 'சோ' வென்று பெய்துகொண் டிருந்தது. கம்பளிச் சட்டை போட்டுக் கொண்டு போயிருந்தேன் நான். ஆனால், சுரமாய்க் கிடப்பவர் என்று நான் கேள்விப்பட்ட கனவான் செய்ததென்ன? முற்றத்தின் மூலையில், மாடியில் பெய்த மழை ஜலம் கொட கொடவென்று தாரையாய்க் கொட்டிக்கொண் டிருந்தது. அந்தத் தாரையில் அவர் சாவதானமாக உட்கார்ந்து ஸ்நானம் செய்துகொண் டிருந்தார்!

ஸ்நானம் முடிந்து வந்ததும், ''உங்களுக்கு சுரம் என்று சொன்னார்களே!'' என்று ஆச்சரியத்துடன் கேட்டேன்.

''ஆமாம்; சுரந்தான். நேற்று 104 டிகிரி இருந்தது. இன்று 102 டிகிரி இருக்கிறது'' என்றார்.

''பின், அதற்குள் பச்சை ஜலத்தில் . . . ''

''ஆமாம், சுரத்துக்கு இது சிகிச்சை. குளிர்ந்த ஜல ஸ்நானத்தினால்தான் நேற்றைவிட இன்று குறைந்திருக்கிறது. நாளைக்குப் பூராவும் சொஸ்தமாகிவிடும்'' என்றார்.

பிறகு, தமது 'மலேரியா' சுரத்தின் கதையை ஆரம்பித்தார். பதினைந்து வருஷ காலம் மலேரியாவினால் மிகவும் கஷ்டப்பட்டதாகவும், எவ்வளவோ சிகிச்சைகள் செய்தும் பயனில்லையென்றும், கடைசியாகக் குளிர்ந்த ஜல ஸ்நானத்தின்மூலந்தான் மலேரியாவை வெற்றி கொண்டதாகவும் கூறினார்.

இவ்வளவுக்குப் பிறகு என்னுடைய பெருமையை நான் சொல்லிக் கொள்ளாமல் இருக்க முடியுமா? என்னுடைய ஜலதோஷத்தின் சரித்திரத்தை எடுத்துவிட்டேன். ஸ்ரீமான் முதலியாருடைய முகத்தில் சந்தோஷம் தாண்டவமாடிற்று. தம்முடைய ஜல சிகிச்சை முறையைச் சோதனை செய்வதற்கு இவ்வளவு நல்ல பாத்திரம் கிடைத்ததே என்று தான் போல் இருக்கிறது!

"தினம் இரண்டு தடவை காலையிலும் மாலையிலும் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்து வாருங்கள். ஜல தோஷம் நீங்காவிட்டால், என்னைக் கேளுங்கள்."

"ஆள் உயிரோடிருந்தாலல்லவா உங்களைக் கண்டு கேட்பதற்கு?" என்றேன். பிறகு, குளிர்ந்த ஜல ஸ்நானம் சம்பந்தமாக என்னுடைய அநுபவங்களைக் கூறினேன். டாக்டர் சங்கராச்சாரி 'குளிர்ந்த ஜலத்தில் குளித்துப் பழக்கம் செய்துகொள்ள வேண்டும்' என்று சொன்னரல்லவா? அதற்கு முன்னாலும் அது தெரியாமலில்லை. எத்தனையோ புத்தகங்களில் படித்திருக்கிறேன். எனவே, "எத்தனையோ முறை 'இன்றுமுதல் வெந்நீரின் அடிமைத் தனத்திலிருந்து விடுதலை' என்று தீர்மானித்துக் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்வேன். சில மணி நேரத்துக்குள் கண்டிப்பாய் ஜலதோஷம் பிடித்துவிடும். பிறகு பழையபடி வெந்நீருக்குத் திரும்புவேன். இம்மாதிரி சோதனை தொடங்கிவிட்ட முறைகளுக்குக் கணக்கே இல்லை" என்றேன்.

"ஸார்! நீங்கள் ஒரு தடவை ஸ்நானம் செய்துவிட்டு நிறுத்தியதுதான் தவறு. தொடர்ந்து மறுபடியும் மறுபடியும் செய்திருக்க வேண்டும்" என்றார் ஸ்ரீமான் முதலியார்.

வேறு சந்தர்ப்பத்தில் வெறொருவர் இம்மாதிரி யோசனை சொல்லியிருந்தால் எக் காரணத்தினலோ அவருக்கு என்னை இப் பூவுலகில் பார்த்திருக்க விருப்பமில்லையென்று தீர்மானித்திருப்பேன். ஆனல், ஸ்ரீமான் முதலியார்மீது இத்தகைய சந்தேகம் கொள்ளச் சிறிதும் இடமில்லை. மேலும் அவர் நான் பார்த்திருக்கும்போதே மறுபடியும் சென்று

முற்றத்தின் மூலையில் உட்கார்ந்து மழைத் தாரையில் ஸ்நானம் செய்துவிட்டு வந்தார். அல்லாமலும் வீட்டி லிருந்த ஏழு வயதுப் பெண் குழந்தையைக் கூப்பிட்டார்.

''அம்மா! உனக்கு ஏதாவது சுரம், கிரம் வந்தால் என்ன செய்வாய்?'' என்று கேட்டார்.

''குளிர்ந்த ஜலத்தில் குளிப்பேன்'' என்றது குழந்தை. இதற்குப் பிறகு என் உயிருக்குத் துணிந்தேன்.

தும்மலுடன் வீட்டிற்குள் நுழைந்தவன், கொட்டுகிற மழையில் நேரே குழாயடிக்குச் சென்று உட்கார்ந்தேன்.

ஏறக்குறைய ஒன்பது மாதம் ஆகிறது. தினந்தோறும் தவறாமல் இரண்டு வேளை குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்து வருகிறேன். உயிரோடு இருக்கிறேன் என்பது வெளிப்படை.

குளிர்ந்த ஜலம் வெற்றி பெற்றுவிட்டது! ஜலதோஷத் துக்குத் தோல்விதான்! அது முழுதும் நீங்கிவிட்டது என்று சொல்லவில்லை. இரண்டு மாதத்துக்கு ஒரு முறையா யிருந்து, மாதாந்தரமாகி, மாதம் இரு முறை, மும்முறை, வாராந்தரம், வாரம் இரு முறை, மும்முறை எல்லாமாகிக் கடைசியில் தினசரியாகி இருந்த ஜலதோஷம் இப்போது மறுபடியும் பின்னோக்கிச் சென்று மாதம் ஒரு முறைக்கு வந் திருக்கிறது. இனி நான் வெந்நீரின் அடிமையல்லன். குளிர்ந்த ஜலத்தைக் கண்டு பயமே இல்லை.

கொஞ்ச நாளைக்குமுன் எனக்கு 'இன்புளுயன்ஸா' காய்ச்சல் வந்தது. 104 டிகிரி வரையில் போயிற்று. இரண்டு தடவைக்குப் பதில் தினம் மூன்று தடவை குளிர்ந்த ஜலத் தில் முழுகினேன். மருந்து எதுவும் சாப்பிடாமலே சுரம் குணமாயிற்று. அச்சமயத்தில் ஒரு நாள் ஸ்ரீமான் முதலி யார் என்னைப் பார்க்க வந்தார். 'மூன்று தடவை போதாது. நாலைந்து தடவையாவது ஸ்நானம் செய்திருந்தால் இன்னும் சீக்கிரம் குணமாயிருக்கும்' என்றார்.

(1) சரியான உணவு அருந்துதல்;

(2) மலச்சிக்கல் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளுதல்;

(3) அடிக்கடி குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்தல் - இம் மூன்று முறைகளின்மூலம் மனிதன் கூடிய வரையில் நோயில்லாமல் வாழலாம் என்றும், நம்வசமில்லாத காரணங்களால் நோய் ஏற்பட்டாலும் மருந்தில்லாமலே குணப்படுத்திக்கொள்ளலாமென்றும் ஸ்ரீமான் முதலியார் சொல்கிறார்: கம்பனுடைய கவிதையைப்பற்றிப் பேசுகையில் எவ்வளவு பரவசமடைகிறாரோ, குளிர்ந்த ஜல ஸ்நானத்தைப்பற்றிப் பேசும்போதும் ஏறக்குறைய அவ்வளவுக்கு அவர் அடைவதைக் காணலாம்.

நேயர்களில் விருப்பமுள்ளவர்கள் இச் சிகிச்சை முறையைக் கைக்கொண்டு பயன்பெறலாமென்பதற்காகத் தான் இவ்வளவு தூரம் எழுதினேன். ஆனால், வீட்டிலுள்ள பெண் தெய்வங்களின் எதிர்ப்புக்கும் டாக்டர்களின் கோபத்துக்கும் தயாராயிருந்துகொண்டு அவர்கள் இதை ஆரம்பிக்க வேண்டும்.

யார் அங்கே? . . . . டாக்டர் ஸாரா? வாருங்கள், வாருங்கள். உடம்பு சௌக்கியமாய் இருக்கிறது; ஏதாவது மிக்ஸ்சர் கொடுக்கிறீர்களா?

---

ஓம் ஸ்ரீசாயி ராம்

# அமரர் கல்கி

பாலரவி நிறுவனத்தின் அதிபர் உயர்திரு. வேங்கடராமன் அவர்கள் (இவரை நாங்கள் செல்லமாகப் பெரியவர் என்று அழைப்பது வழக்கம்) 'ஆனந்த ஓவியம் - I' என்ற தலைப்பில் அமரர் கல்கியின் சில ஹாஸ்ய எழுத்தோவியங்கள் அடங்கிய தொகுப்பு ஒன்றைப் புத்தக உருவில் வெளியிடப் போவதாகக் கூறிவிட்டு, அமரர் கல்கியின்பால் ஈடு இணையற்ற பக்தியும் அன்பும் எனக்குள்ள காரணத்தால், 'இவரைப்பற்றிச் சில வரிகள் எழுதுங்களேன்' எனவும் தெரிவித்தார்.

ஆம்; அமரர் 'கல்கி'யைப்பற்றிய ரஸமான விவரங்களை நேரில் அநுபவித்ததை - அடிக்கடி அலுவலக நேரங்களிலேயே எனக்குச் சொல்லுவார் பெரியவர். நேரம் போவதே தெரியாது. அமரர் கல்கியிடம் எனக்குள்ள பக்தியும் பேரன்பும் அளவுகடந்தவையாகும். ஆனால், இவரைப்பற்றிச் சில வரிகள் எழுத எனக்குள்ள தகுதி . . . ? ஒரு மனம், சில வரிகள் எழுதத் தூண்டியது; மற்றொன்று, எனது 'யோக்யதாம்சம்'பற்றி அலசியது! தைரியமாகச் 'சரி' என்று சொல்லிவிட்டேன் பெரியவரிடம்! காரணம் : அளவு கடந்த பேரன்பும் பக்தியும் கொண்டவர்களான ஏகலைவன், அர்ச்சுனன், கண்ணப்பன் இவர்கள் ஒவ்வொருவராக என் மனக்கண்முன் பவனி வந்து என்னைக் குதூகலிக்கச் செய்தனர்! துணிந்தேன்! பக்தியே உருக்கொண்ட மழலைச் சொற்களை ரசிக்காதார் யார்?

அமரர் கல்கியின் எழுத்தில் மயங்காதார் யார்? எந்த விஷயத்தையும், அவர் எடுத்தாளும் பாணி உள்ளதே — அதுவும் உயர்தர இலக்கிய ஹாஸ்ய பாவத்துடன் தமக்கே உரிய சரளமான கொஞ்சும் தமிழ் நடையில் — ஆஹா! அது மகா அற்புதம்! படிக்கப் படிக்க மன மகிழ்ச்சி ஏற்

படும். படித்துக்கொண்டே இருக்கலாம்போல் தோன்றும். சரித்திரம், பொருளாதாரம், விஞ்ஞானம், நாடகம், சங்கீதம், சிறு கதைகள், நவீனம், சரித்திர நவீனம், கட்டுரைகள், பிரயாணம், நாட்டியம், தத்துவம், வேதாந்தம், இதிகாச புராணக் கதைகள், நாட்டுப் பற்று, தேசீயப் பற்று, சினிமா — உலகத்திலுள்ள கலைகள் அனைத்திலும் திறம்பட ஹாஸ்ய பாவத்துடனும் பொருள் செறிவுடனும் எடுத்தாளும் திறமை - புலமை - இவருக்கே உரிய தனிச் சிறப்பு அம்சமாகும். இவை யாவும் ஒன்று சேர்ந்து ஒரே இடத்தில் அமைவது பூர்வ புண்ணிய விசேஷம். 'தமிழ்ப் பாட்டி' - சாக்ஷாத் சரஸ்வதி தேவியின் மறு அவதாரம் எனப் போற்றப்பட்ட - ஔவைப் பிராட்டியைச் 'சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?' எனக் கேட்டுச் சிரிக்க வைத்துக் குதூகலித்தாரே, அந்த ஞான பண்டிதனுல் மட்டுந்தான் அப்படிச் செய்ய இயலும்! இத் தெய்வத்தின் பரிபூரண கடாக்ஷம் முழு அளவிலே வாய்த்த பேறு பெற்றவர் அமரர் 'கல்கி'.

ஞானம், தெளிவு, வாக்கு வன்மை, சிலேடை, ஹாஸ்ய பாவம், சிரித்து மகிழ வைக்கும் படைப்புக்கள், பேச்சுக்கள், முதிர்ந்த கற்பனை எல்லா வயதினரையும் ஈர்த்துப் படிக்கத் தூண்டும் மனுேபாவத்தோடு கூடிய எழுத்து எல்லாம் ஒரே இடத்தில் உள்ளன என்ருல், இவற்றை மகான் 'கல்கி'யிடந்தான் காண்கிறேம்.

எண் சோதிட வல்லுநர்கள் அங்காரக கிரஹத்தை எண் 9ஆல் குறிப்பர். 9 எண் பிறந்த நாளிலோ, கூட்டு எண்ணிலோ அல்லது பெயரிலோ - ஏதாவது ஒன்றில் மட்டும் இருந்தாலே பேரறிஞர், சர்வ வல்லமை பொருந்தியவர் என்பதாக எண் சோதிட நிபுணர்கள் சொல்கின்றனர். அமரர் 'கல்கி'யின் விஷயத்திலோ அவரது பிறந்த எண் 9; கூட்டு எண் 9; மேலும் பிறந்த தேதி 9 மாதம் 9 வருஷம் 1899 = 999 = 27 = 9! ஆரம்ப காலத்தில் KRISHNAMURTHY 41 = ; மூன்று 9க்கும் அநுசரணையாக அமைந்துள்ளது எண் 41 = 5; அதிலும் 41 அபார சக்தி வாய்ந்த எண்!

ANANDA VIKATAN = 37; இதன் அடிப்படை எண்ணாக '9' அமைந்தது போற்றத்தக்கது. 'விகடன்' வாயிலாக அமரர் 'கல்கி' புரிந்த சாதனைகள் பிரமாதம்! அடுத்தபடி : அவர் பத்திரிகை KALKI 21321 = 9ஐ ஆரம்பித்து அதிகமாகக் 'கல்கி' என்ற புனைபெயரிலேயே எழுதி அளவற்ற புகழ் எய்தினார்! எல்லாம் ஒரே 'ஒன்பது' மயமான பின்புதான்! நீண்ட சரித்திரத் தொடர் நாவல்கள் இதற்குமுன் அவர் எழுதியதாக எனக்கு நினைவில்லை. ('கல்கி' பத்திரிகை தொடங்கிய புதிதில் ....... 'கல்கி' மானேஜர் மிகவும் கஷ்டப்பட்டுப் போனார்! பம்பாய் எங்கே, கல்கத்தா எங்கே, டில்லி எங்கே என்று நாலு திசைகளிலும் சென்று 'கல்கி'ப் பத்திரிகைக்குக் காகிதம் வாங்க வேண்டியதாயிற்று! — 'சிவகாமியின் சபதம்' பக்கம் 4 & 5 ஆசிரியர் 'கல்கி'யின் முன்னுரை.)

கடைசி வரையில் எழுத்துலகில் மகோந்நத நிலையில் சக்கரவர்த்தியாகவே இருந்து வாழ்ந்த மகான்! பேராசிரியர் கே. வி. ரங்கசாமி ஐயங்கார் கூறியுள்ளதில்தான் எவ்வளவு உண்மை பொதிந்துள்ளது! ('சிவகாமியின் சபதம்' திரு. பேராசிரியர் கே. வி. ரங்கசாமி ஐயங்கார் பாராட்டுரை பக்கம் xix) - 'In a decadent and ruined universe the golden age will be the gift of God incarnating to destroy wrong and recreate the universe. To His incarnation for this task of mercy, the name KALKI is given. It is this name that the author of this remarkable classic has taken. Is it by accident or by inspiration?'

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப — இவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு! —திருக்குறள்

அமரர் 'கல்கி' அவர்களின் அருமைப் புதல்வர் உயர் திரு கி. ராஜேந்திரன் இப் புத்தகத்தின் முன்னுரையில் கூறியவாறு 'கல்கி' அவர்களின் நகைச் சுவை எழுத்தைப் படித்துக் கவலைகளை மறந்து சிரித்து மகிழ்வோமாக!

சென்னை - 24
7 - 1 - 1976

ரமணன்

# எமது இதர வெளியீடுகள்

| | | ரூ.பை. |
|---|---|---|
| 1. | அருள் வாக்கு — I<br>ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீமத் சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அருளியது | 3 - 00 |
| 2. | திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா<br>ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் அருளியது | 0 - 25 |
| 3. | ஸ்ரீவேங்கடேச ஸுப்ரபாதம்<br>தெளி பொருளோடு விசேடக் குறிப்புக் களும், ஸுப்ரபாதம், ஸ்தோத்ரம், ப்ரபத்தி, மங்களா சாஸனம், கத்தியம் இவைகளும் அடங்கியது. | 1 - 30 |
| 4. | ஸ்ரீகாவிய ஓவியம்<br>ஸ்ரீ கோவி. மணிசேகரன்<br>தொன்மை கால சரித்திர நிகழ்ச்சிகளை - கோவி நடையில் - எளிய தமிழில் அழகு மிளிரப் புனைந்த பத்து சம்பவங்கள். | 4 - 00 |
| 5. | ஆனந்த ஓவியம் — I<br>அமரர் 'கல்கி'<br>கற்பனையும், கருத்தும், நகைச் சுவையும் மிளிரும்; ஆனந்தத்தில் ஆழ்த்தி, திரும்பத் திரும்பத் தெவிட்டாது படிக்கத் தோன் றும் தொகுப்பு | 3 - 00 |
| 6. | ஆனந்த ஓவியம் II<br>ஸ்ரீ ரா. பார்த்தசாரதி, பி.ஏ.,பி.எல்.<br>கொந்தளிக்கும் ஹாஸ்யம், தங்கு தடை யற்ற ஓட்டம். | 3 - 00 |
| 7. | ஆனந்த ஓவியம் — III<br>'துமிலன்'<br>நகைச்சுவை ததும்பும் குட்டிக் கட் டுரைகள் | 3 - 00 |


## பாலரவி அண்ட் கோ.

'திருமலை'

நூல் வெளியீட்டாளர்கள்

65/1, ஆற்காடு ரோடு, கோடம்பாக்கம்

சென்னை - 600 024



2933

RF279

P1V+8414

29306



ஸ்ரீ பி எல்.எஸ். பிரஸ், 'திருமலை', சென்னை - 600 024